உ

குகமயம்

வாலி கதி

வாலியை இராமன் மறைந்திருந்து எய்யவில்லை

*

ஆசிரியர் :

கவிராஜ் **E. S. இராமசாமி ஜோதிடர்**, R. I M. P.,

தமிழ்ச்சித்தர், சூக்கும பஞ்சபட்சி நூல், திருக்கணித இராமசேகரம்,

ஸ்ரீ முருகன்அந்தாதி, திருக்குறள் (தற்பதநெறி) உண்மையுரை

(மூலகணித கோள் நூல்களின் ஆசிரியர்)

பதிப்பாசிரியர் :

Dr. E. R. சிவானந்தம், G. C. I. M. & D. M. & S.

தமிழ்ச் சித்தர் நிலையம்,

வெங்கடேசா காலனி,

பொள்ளாச்சி P. O.

1970

*

பதிப்பகம் :

ராஜா பிரிண்டிங் & பப்ளிஷிங் ஒர்க்ஸ், பொள்ளாச்சி.

திருக்குறள் உண்மையுரை பயன்

இது மதச்சார்பற்றது. தெய்வ (புவன) நீதி. இதன் உண்மையுரை நேரில் கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள்! இந்நீதிவழியே உலகத்தை அரசு நடாத்திச்செல்லுமேல் அதுவே இராமராச்சியம். கடவுள் இல்லை! என்று சந்தேகப்படுவோர் சந்தேகம் நீங்கும்வரையும் உடனிருந்து பொறுமையுடன் கேட்டு நலம் பெற்று உலக நலத்துக்கு உதவுங்கள்

ஒன்றே கடவுள்—அது தற்பதம் (மாணடி)

முகவுரை

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியராகப் பெறின்"

திண்ணியர்:— முனிவர், கடவுள், தேவர், குருமார், பலவான் (இ-ள்) தற்பத நிலையிலுள்ள முனிவர்கள் எண்ணிய எல்லாவற்றையும் எண்ணியவாறே எய்துவர் (எ-று)

சகத்தில் மனதின் வழியே அறிவுபுற விடயங்களில் செயலாற்றும் மனிதத்தன்மையால் எண்ணிய எண்ணியாங்கு(எதுவும்)எய்தாது எண்ணிய எண்ணியாங்கு எய்தும் நிலை— (கம்பர்-அநுமன்)

போதமும் பொருந்து வேள்விப் புரையறு பயனும் பொய்தீர்
மாதவம் சார்ந்த தீரா வரங்களும் மற்றும் முற்றும்
யாதெவ நினைந்தான் அன்ன பயத்தன யேது வேண்டின்
வேதமு மறமுஞ் சொல்லும் மெய்யற மூர்த்தி வில்லோன்

(எ-து போதமும் - ஞானமும் பொருந்து வேள்விப்புரை அறு பயனும் - நேர்மை பொருந்தினவான யாகங்கள் செய்ததால் உண்டான பழுதுநேராத பயன்களும். பொய்தீர் மாதவஞ்சார்ந்த தீரா வரங்களும் - அநித்திய (சகத்தோற்ற) தோற்றங்களிலிருந்து விடுபட்டு ஒன்றிய மகா தவத்தால் சேர்ந்த (மகத்துவத்தால்) வரையறையின்றிக்கொடுக்கும் வரங்களும். மற்றும் முற்றும் - இன்னும் தேவைப்பட்ட யாவும். யாது எவன் நினைந்தானன்ன பயத்தன - எந்த ஞானி எதை எண்ணுகிறானோ அது எண்ணிய எண்ணியாங்கு உண்டாவன.

தற்பதஞானி எந்த ரூபத்தில் காட்சிபெற விரும்புகிறானோ அந்த ரூபத்தை அடைந்து தோன்றுகிறான். மற்றும் முற்றும் - மற்றயாவும் ஒரு சிறு குன்றுள் விசாலமான உலகம் தேவையென்றால் அதனுள் மலர்ந்து அவ்வாறே ஆகிவிடும் அது. ஏதுவேண்டின் மூலகாரணம் கூறவேண்டுமேல். வேதமும் அறமும் சொல்லும் மெய் அறமூர்த்தி. வேதங்களும், திருக்குறள் அறத்துப்பால் முதல் அத்தியாயமும் மெய்யுணர்தல்போன்ற பல பாக்களும் நிர்ணயித்துக் கூறும் மெய்ப்பொருளே அவன். வில்லோன் தர்மத்தை நிலைநாட்டும் நிமித்தம் கோதண்டராமனாக உள்ளான்.

தற்பத நிலையில் நின்று எண்ணிய எண்ணியாங்கு எய்திய தவபலங்களைத் தர்மநெறி வழுவாது செயலாற்ற அறியாத மாயா

சம்பந்த மடையரான இராவணன்—வாலி முதலிய இன்னோர்களை நெறி தவறிய குற்றத்திற்காகத் தற்பதமே எதிர்ப்பாக வந்து சங்காரம் செய்வது

"தவம் செய்வார்கள் வெருவுறச்சென்றடை காம வெகுளி"

—கம்பர்

காமம் வெகுளி இவ்விகாரங்கள் புகுந்து தவத்தைக்கெடுக்கும் என்ப. தற்பத சொரூபம்:-தர்ம பாதுகாப்புக்காகத்தோன்றுவனவே. முற் சன்மங்களின் பற்பல குற்றச்சாட்டுகளும் நியதியும் பொருந்தும்படி ஏற்பட்டனவே. நேர்மை நெறிக்கு மாறுபாடே அழிவு இது தற்பத நியதி.

வசிட்டமுனிவர் தவம்

வசிட்டமுனிவர் ஒருகாலத்தில் உயர் கயிலைப் பெருங்கிரியில் உருத்திரனை அருச்சனை செய்தொருகால், கங்கை நதியின் சமீபமாய் பன்னகசாலை அமைத்து சங்கரனை நோக்கிப் பற்பல காலம் தவஞ் செய்துவந்தார். ஆவணி மாதம் அட்டமி திதிநாள் நடுநிசியில் நிசப்தமான இருளில் சங்கரன் பிரசன்னமானார். நந்திதேவர் முன்னேவர உமையவள் சகிதம் வரலும், வசிட்டர் மாணுக்கர்களுடன் விரைவிலெழுந்து பன்மலர் தூவி இருவர்களையும் பூமியில் படிந்துவணங்கியபின் ஈசன் கணங்களையும், உமைசேடித்திரள்களையும் இன்பநேசமாக ஏற்றியபின் சிவபராஞ்சுடர் வசிட்டரை நோக்கிக் கேட்கிறார்.

உபசாந்தத்தினால் துன்பம்தீர அமைதிபெற்று பேரின்பநிலை பெறும்படி ஆறறிவும் ஒன்றி பிரமபதத்தில் நிலையானதா? விக்கினமின்றி தவம் நடந்துவருகின்றதா? அடையவேண்டியவை அடையப்பெற்றதா? புறநோக்கம் மறைந்ததா? என்று சங்கரன் கேட்க வசிட்டர் சொல்கிறார்: தேவ தேவா! உன் கிருபை பெற்றவருக்கு பெறுதற்கரியது ஒன்றுமேயில்லை. விடய அச்சங்கள் உன் தியானகாரணமாய் சமீபத்திலும் வரமாட்டா. இந்த சகத்தில் உனைத்தாழ்ந்தாரைத் தாழ்ந்தாரில்லை. தவ சொரூபமே என்று பன்முறையும் துதிசெய்து கேட்டுக்கொண்ட உபதேசம் வருமாறு:- பலன்தரும் தேவபூசை யாது? என வசிட்டர் கேட்க, சங்கரன் கூறியது.

"தேக முதற்பிரிவுகளாய்ச் சிறியனவாம் பொருள்களில் அத்தெய்வம் உண்டோ; பாகமறப் பணியற அடிமுடிவற்றுள உணர்வே பரமபோதம்"

"அடியும் முடிவும் இலாச்செயப்படா உணர்வே தெய்வம்" அயன், அரி, அரன் முதலிய யாவரும் செயற்படுதேவ சொரூபங்கள் ஆகையினால் உணர்வே தெய்வம் அருச்சித்தற்குரியதாம்" என்றார். இந்த உணர்வுதான் 'அகரம் முதல' அகத்துள்ளுள்ள பேரின்பப் பொருள். உள்ளம் உள்ளதை ஓர்ந்து உணர்தல். நிலையிற்றிரியா 'தடங்குதல். மெய்ப்பொருள் - பேரறிவு. தற்பதம் - சீவன்முத்த நிலை - இந்நிலையிலுள்ளவர்கள் "எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்" மூலபலசேனையென்ன! வாலியென்ன!! பல்லாயிரக்கோடியண்டங் களும் ஒருங்கே திரண்டுவந்து எதிர்நின்றாலென்ன !!!

வாலியே சொல்கிறான் (கம்பன்)

நின்ற பேருலகெலா நெருக்கி நேரினும்
வென்றி வெஞ்சிலையலால் பிறிது வேண்டுமோ
தன்றுணை ஒருவரும் தன்னில் வேறிலான்
புன்றொழிற் குரங்கொடு புணரு நட்பனே

எண்ணில் கோடி பிரமாண்டங்களில் விண்ணுடுபோன்ற பேரண் டங்கள் யாவும் ஒன்றுதிரண்டு எதிர்த்துவந்தாலும் எவராலும் வளைக்கமுடியாத வில்தவிர வேறு துணை அவசியமில்லை என்கிறான். இன்னும் வாலி இராமனை நன்கு புரிந்துகொள்ளவில்லை - எப்படி ? இதோ இலக்குமணன் சொல்வதைக்கேளுங்கள்:

பாரெனக் கனலெனப் புனலெனப்பகர்
பேரெனத் திசையென முனியிற் பேருமால்
காரெனக் கரியவக்கமலக் கண்ணனை
யாரெனக் கருதியிவ் விடரி னாழ்கின்றீர்

(எ-து) பூமி என்றும், நெருப்பென்றும், நீரென்றும், பூதங்க ளென்றும் திக்குகளென்றும் கூறும் இவைகள் யாவும் இராமன் கோபித்தால் பெயர்ந்தொழியும் (இங்ஙனமிருக்க) மேகம்போன்ற கரிய நிறத்தையுடைய தாமரைக் கண்ணனை யார் என்று நினைத்து இந்தத் துன்பத்தில் அழுந்துகின்றீர் என்பதே.

இராமனுக்கு வில் அம்பு முதலிய எந்த ஆயுதங்களும் அவசியமில்லை. இராமனுக்கு மட்டுமன்று வசிட்டர்போன்ற சீவன் முத்தர்களுக்குந்தான் தற்பதநிலையில் நின்று சிந்தித்தால் எண்ணிய எண்ணியாங்கு நடைபெறும் இந்நிலையில் நின்ற செயல், கோபித்து நிகழ்ந்த சிவபெருமான் செயலில் அறிவீர்கள். பிறசீவ காருண்

யத்தைக்கருதி சத்துருவைமாத்திரம் அடக்கமுயன்றால் வசிட்டர் காசியரசனை ஒடுக்கிய கதையை அறிவீர்கள்.

'நின் மண்ணினுக்கென்னுடல் பாரமன்று'

இராமன் ஆட்சியில் வாலி சிற்றரசனானாலும், இந்த வாலியின் தவவரபலத்தை அநுமன்மூலமறிந்திருந்தும் பொருட்படுத்தாத இராகவன் கிட்கிந்தை ஆட்சி நினதே என்று சுக்ரீவனுடன் கூறுகிறான். இது தற்பதநிலையில் தன் நம்பிக்கையின் சக்திதான் சுக்கிரீவனை நட்பாக நாடுதல் பலம் கருதியல்ல; அவன் நன்னிலையறிந்ததேயாகும். சுக்கிரீவன் நன்னிலை நெறியையும், வாலி தீயவன் என்பதையும் கவந்தன் (தேவரகசியமறிந்த தனு என்ற) தேவன்மூலம் (இராமன்) தெரிந்துகொண்டான். சுக்கிரீவன் நெறிநிலையை இராமன் வைகுந்தம் புறப்படுகிறபோதுதான் பூரணமாக தெரிந்துகொண்டபடி நாமும் தெரிந்துகொள்வோம்.

கார்காலம் கழிந்ததும் வரும்படியான கட்டளையை மேற்கொண்ட சுக்கிரீவன் சேனைகள் சேகரம் தாமதப்படவே இராமன் கோபமாகி இலக்குமணனை அனுப்புகிறான் இந்நிலையறிந்த சுக்கிரீவன் தன்னைத்தானே நொந்துகொள்கிறான்

தன்னைத்தானுணரத் தீரும் தகையறு பிறவியென்ப
தென்னத்தான் மறையும் மற்ற துறைகளுமுரைக்குமிந்த
முன்னைத்தான் உணர்ந்திடாத முழுப்பிணியழுக்கின் மேலே
பின்னைத்தான் உணரும்பெற்றி நாவுண்டு பிழைக்கும் பித்தோ
—கம்பன்

தன்னை அறியும் அறிவுதனைப் பெற்றால்
மன்னு பிறப்பில்லை வீடு — ஔவை

தன்னையறியும் செயலில் ஈடுபாடுள்ள ஞானி என்றே கூறலாம். இராமன் வைகுந்தம் புறப்படுமுன் நட்பர் யாவருக்கும் சன்மானம் முறையே கொடுக்கிறான் சுக்கிரீவன் முறை வருகிற முற்கணத்தில் சுக்கிரீவனே முன்சென்று வணங்குகிறான் (ஏதோ அலுவல் காரணமாய் வைகுந்த பிரயாணம் தடைபடுமோ. என்றுகூட இராமன் நினைக்கக்கூடும்) வணங்கிச்சொல்கிறான்

"துன்னி – அங்கதனுக்கு மகுடஞ்சூட்டிவைத்து
இன்னணம் வந்தனன் என்று இயம்பினன்"

நானும் வைகுந்தப் பிரயாணத்திற்கு நின்னுடன் தயாராக வந்துள்ளேன் என்று கூறினான். இந்த மேலான ஞானநிலை உணர்ந்த

அனுமன் தருமதேவதையான சுக்கிரீவனுடனே கூடியிருந்தான் என்பதும் அறியத்தக்கது

கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

(அ-ம்) கற்பவை கசடறக்கற்க—கற்றபின் அதற்குத்தக நிற்க
(க-ரை) கற்கப்படுபவை மனமாசு நீங்கும்படியாக (ஆக்கிய நூற்களைக்)கற்கவேண்டும் கற்றுக்கொண்டபின் அவை பொருந்தும் படியான நெறிக்கண் நிற்க. (எ-ம்)

(மனமாசகல்வதற்குதவாத மற்றதை படிக்கக்கூடாது)

அவையடக்கம்

தமிழ் மகாவித்வான்கள் ஜீவன்முக்தராகிச் செய்யவேண்டிய இச்செயல், அதிகங்கற்றிலா என்னுள்ளே எழுந்தருளிய போறிவின் சுயசிந்தனையிலிருந்தே வந்து எழுதப்பெறுவதால் தற்பதவிலேயேஜகத் தோற்றமாதலால் வாசகர்களுக்கே சுயமாக உரியவையென்றே கூறுவதுதவிர.................... "தெய்வமெனதுள்ளத்திருந்து திருவுளம் பற்றியதே"

—நூலாசிரியர்

பதிப்புரை.

காட்சிக்குரிய புவனம், தூலசூக்கும சரீரம் பெற்ற தேவராதி மனிதர், சீவகோடிகள் யாவற்றையும் காலத்தின் கோலம் அழிக்கும் போது கவர்ச்சிக்குரிய சககாரண முதன்மூலத்திறைவரான அயன், அரன், அரி இவர்கள் ஒன்றுமிடம் தற்பதம் என்ப சகல அழிவின்பின்பும் அழிவில்லா (செயப்படா) உணர்வே தெய்வம் எங்கும் வியாபகமானது சூன்யமாகி மீட்டும் சகம் தோன்றுவதற்குரிய மூல உணர்விலொன்றிய மூவர் முதலில்தோன்றி முறையே புவனம் தோன்றுவதால் புவன சீவகோடிகளுக்குத் தாயும் தந்தையும் தெய்மும் தவமும் இம்மூவர்களே ஒன்று மூன்றாகி உலகமாகிறது. இந்நெறியில் சுதந்தரமுள்ளவை எதுவும் இருக்கமுடியாது; ஏற்படவும் முடியாது இயலாததுமாகும். சுதந்திர ஆட்சி பெற்றுவிட்டோம் என்கிறோம்; அதில் எவர்க்கும் சுதந்திர ஆட்சி இல்லை என்பதை சிந்தித்து அறிவீர்கள். முதன்மூலத்திறைவர் மூவருக்கே

சுதந்திரமில்லை என்றும், சுதந்திரம் தற்பதத்திற்கே உரியதொன்றாகும் என்ப. அவனன்றி ஓர் அணுவும் அசையாது. விதி விதி என்று கூறுவர் வினையே அனுபவநிமித்தம் விதி என்பதாகுமே தவிர விதி என்பதொன்றிருக்கமுடியாது. ஆனால் விதி என்பதை நீதி தர்மசாஸ்திரம் என்று சொல்லலாம். இந்த விதிக்கு மாறுபாடாக நடப்பவனைத்தீவினையாளன் என்பர். தீவினைக்குரிய பலன் (தண்டனை) அனுபவிக்க ஏற்படும்போது தடுக்கமுடியாததால் விதி என்று கூறுகிறோம். செய்த தீவினையை அனுபவித்தல் என்பது அவசியமாதலால் அதை விதி என்கிறோம். வினையனுபவிப்பது உறுதிதான் இதை விதி என்பது கற்பனை. புகழ் வினையாளனுக்கு வினைப் பயனுமில்லை விதியுமில்லை.

புகழ்வினை என்பது:—உணர்வில் ஒன்றிய சீவன்முத்தன் (ஞானி) கடவுள் நியதியில் நேரும் செயல்களைப் பந்தமின்றிச்செய்வதே இறைவன் பொருள் சேர் புகழ்வினை

கசடுற (மனமாசுறக்) கற்றவர் பலர் மெய்யைப்பொய்யெனத் தான்தோன்றித்தனமாகப் பிதற்றும் வசனங்களுக்குச் செவிசாய்ப்பது, அவர்களை மதிப்பது மதியீனம். அவர்கள் வந்துள்ள அலுவல் (சககாரியம்) தீவினையாளரை அழிவின் பாதையில் செலுத்தி புழுக்குழியில் வீழ்த்திப் புதைக்கவந்தவர்கள். அவர்களை மேலிடத்திலிருத்தி அவனையும் தீவினையாளரையும் வீழ்த்தி அழிப்பதே திருவருள் நோக்கம். இந்நிலையை ஞானிகள் உணர்ந்து அவரையும் அவன்போன்றவரையும் ஒதுக்கி விலகுவர்.

எனவே—திருவருட்பாதுகாப்பு நீதிமானுக்கும் நல்வினையாளனுக்குமுரியவை. புவனம் யாவும் வியாபக உணர்வினிடையே மிதந்துகொண்டுள்ளன தாங்கும் பொருள் அதுவே செயல் தீவினைக்குரியதொன்றாயிருந்தும், செல்வாக்குள்ளவன் செயல் சொல்லெனில் மறுத்துக்கூற உலகம் மயங்குவதோடு அவர்களுக்கு வழிபாடும் செய்கிறது என்றால் அவை காலத்தின் கோலமாகும்.

ஒரு பெரிய நிர்வாகம் நிலைக்கவேண்டுமென்றால்! ஓர் அநீதி அழியவேண்டுமானால் மனித முயற்சி பகீரத பிரயத்தனம் பலன் தருவதுபோல் தோன்றும் முடிவு சரியாகாது இத்தகைய காரியங்கள் நீதி என்று தோன்றி, தற்பத ஜீவன் முத்தன் எண்ணத்திற்கு இலக்காகுமானால் எண்ணிய எண்ணியாங்கு ஏற்படும் என்பது சத்தியம்-உறுதி!

அவர் மகிமை

குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியோடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து

(க-ரை) நிலையிற்றிரியாதடங்கிய ஞானியைக்குறைவாக மதிக்கின் குறைகூறினவன் குடும்பத்துடன் இறந்துபடுபவன் என்ப.

ஒன்னார்த் தெறலும் உவந்தாரையாக்கலும்
எண்ணில் தவத்தால் வரும்

(க-ரை) தவஞானிகள் சிந்தனைக்கிலக்காகும் பகைவன் அழிவன். நட்பன் நன்கு வாழ்வுபெறுவன் என்ப. என்றும் உண்மைநாடி நீதி நிம்மதியுடன் நம் செயலைச் செவ்வனே செய்வோமாக.

பதிப்பாசிரியர்,
டாக்டர் E. R. சிவானந்தம்,
பொள்ளாச்சி.

உணர்வே தெய்வம்

முடிவிலாச் செயப்படா உணர்வே தெய்வம். முதன்மூலத் திறைவர் மூவர். (அறி) அரி, அரன், அயன் இவர்களால் சகச்செய லாற்றும் ஞான விஞ்ஞான பூதங்கள், நவக்கிரகங்கள் ஏனைய நட்சத் திரங்கள், பல்லாயிரக்கோடி அண்டங்கள் ஜீவகோடிகள் முறையே தோன்றுவன; ஒடுங்குவன. அழிவற்ற இறைவர் மூவர். செயற் றுணைவியர் மூவர் தற்பதவடிவினர். யாவும் அழிந்தபோதும் உணர் வில் ஒடுங்கிய ஆனந்தவடிவமே மூவரும். இவர்கள் தவசிகளுக்குக் காட்சியளிப்பது எப்படியென்றால்:

சர்வ வியாபக பரவடிவ தற்பதம் (கடவுள்) தன் சிந்தனை வடிவமே தவசியின் காட்சிக்கு வருவதாகத் தோன்றுகிறது அவ்வ ளவுதான் நாம் பெறவேண்டியது நிசயோகமே. உணர்வில் ஒன்று படுதல். இதைவிட அபூர்வமாய்ப் பெறவேண்டியது யாதுமில்லை. வரங்கேட்பது கொடுப்பது என்றால் பல்லாயிரக்கோடி அண்டமும் என் ஆட்சியில் அடங்கவேண்டும் என்று கேட்கலாம் இதுதான்

அழிவுறுவதாயிற்றே! மெய்மையல்லாததுமாகும்; நீயும் அழிந்து விடுவாய். இத்தகைய வரம் பெறுதற்கு ஓர் தோற்றம் அவசியமில்லை. பல்லாயிரக்கோடி அண்டமும் சிந்தனைப்படி அவனே ஆகி ஆட்சிக் குரியதாகவும் ஆகும். இந்தப் பாவன சகத் (உலகம்) அழிவிற்கே உரியதாதலால் காமம், வெகுளி, மயக்கம் விடுபடாமல் திருடர்களும் ஏழைகளுமே அதிகம் இதை நீக்கும் முயற்சியினால் அற்ப பலன் உண்டென்பதைத் தவிர, செல்வம் நிலைபெறச்செய்யமுடியவே முடியாது. பல்லாயிரக்கோடி அண்டத்திற்கும் ஆட்சிக்குரியவனாக வந்து நீ அடையும் இன்ப அளவு தெரியுமா? ஓர் குடும்பிக்குள்ள இன்ப துன்பத்தைவிடக் கோடானுகோடி துன்பம் மிகுதியேதவிர வேறு இல்லை. அழிவும் உறுதி!

ஆதலால், (1) ஜீவன்முத்தநிலை (2) விதேகமுத்தி (3) முப்பரம்பொருள்களுக்கே சேவை செய்தல். இதுதான் உசிதம். சகத் தொழில்சம்பந்த சிற்றின்ப வரம் எல்லாத் தீமைக்கும் இயல்பாக உள்ளது; வேண்டவே வேண்டாம். அதனால் பரம்பொருட்களான அரி, அரன், அய்னைச் சேவை செய்யும் ஆவல் வருவது இயல்பு. தவறு மன்று வரம்பெறவேண்டியது ஒன்றுமேயில்லை இந்திரபதமும் அவசியமல்ல. அவைபோன்ற அண்டங்களைத் தரிசிக்கலாம். அதனாலும் பிரயோசனம் இல்லை. ஆசை அவசியமில்லை முற்றுப்பெற்றமுடிவு சிவயோகம்.

செயலாற்றவாய சொரூபப்பொருள் திருமால், சகத்செயற்படும் காரணஜோதிவடிவமே சிவன். திருமால் சிந்தனை அண்டமே பிரமன். தேவர் குறைபோக்க நேரிட்டால் சிவன், தன் நிசயோக மூல பலத்தால் அக்குறையை அன்றே போக்கிவிடுவன்.

திருமால் தன்னையன்றி வேறு மூலப்பொருள் இல்லாததால் தானே தந்த வரத்திற்கு எதிர்த் தோற்றமாக அவதரித்து உலகோர் (தேவர்) குறையைப்போக்குவான் அறக்கடவுள் சகத் சீவ கோடிக்கு உட்பொருள் (தாரகபிரமம்) தற்பத உணர்வே தெய்வம். திருமாலுக்கு உட்பொருள் ஒன்று தனியாய் இல்லை அடியார்களுக்கு திருமால் தற்பதத்திலிருந்து தானும் வேறுபட்டவன் எனலாம்படியுள்ளது இவன் மாயச் செயலின் செய்கையேயன்றி வேறல்ல

உணர்வே தெய்வம். இதை உணர்ந்து ஒன்றுபெறப்புனித நெறி நிலை தேவை. 'புறத்தூய்மை நீரால் அமையும்' சரீரத்தை

தண்ணீரால் சுத்தம் செய்துகொள்வது இது யாவரும் செய்து கொள்ளலாம் "அகத்தூய்மை வாய்மையால் காணப்படும்' புனித மனம் (பரிசுத்த நிலை) மெய்ப்பொருளறிந்த நிலையிலமைவது, அகத் தூய்மையுடையவராலாக்கிய ஆகிய விக்கிரகங்களுக்கு (தெய்வ ஞாபகச் சின்னங்களுக்கு) அகப்புனிதமுடையவரால் பூசை செய்வது விக்கிரகம் சீவபலம் பெறும்படியான செயலாம் அகப்புனித ஞானி விக்கிரக ஆராதனை செய்யாதவன் ஆதலால், புனிதமுள்ளவர் விக்கிரக ஆராதனை செய்யலாம், புனிதமில்லாதவர் விக்கிரகத்தைத் தொடக்கூடாது என்பதில் அர்த்தமேயில்லை. அகச்சுத்தமுடையவர் விக்கிரக ஆராதனை செய்யப்பட மாட்டார்களாதலால் புறச்சுத்தமுடைய யாவரும் விக்கி ரகத்தைத் தொட்டு ஆராதனை செய்வதில் எவ்வித தோடமுமில்லை; ஆசாரம், அநாச்சாரம் என்ற நெறி கவனிக்கவேண்டியதுதான். ஆசாரம் என்பது அருளலைப்பொருள்களையே உபயோகிப்பது, உண்பது. இதை சைவம் என்பர். மருளலைப்பொருள்கள் உண்பது உபயோகிப்பது அசைவம் என்பர் ஆசாரம் உள்ளவர்கள் சாதிமதபேதமின்றி உடற்சுத்தத்துடன் எந்த விக்கிரகத்தையும் தொட்டு வழிபாடு செய்யலாம். ஆசாரம் ஏற்றுக்கொள்ளலாம் அநாச்சாரம் விலக்கப்படவேண்டும். இந்நியதி நேர்மை சிந்திக்காது செயற்படும் செய்கை அழிவின் பாதையில் புகுத்திவிடும்என்ப.

தமிழ்ச்சித்தர்.

கதைச் சுருக்கம்

64 கலைக்ஞானம், புராண காவியங்களாதி சகலமும் புலவர் கற்பனை மாயாசம்பந்த விசாலக்கலப்பால் பொய் மெய் கலந்த கலம்பகமாகும் இதனால் உண்மை இரகசியம் அறிந்துகொள்ள முடியாது. பேருணர்வு பெற்று இராமன் நிலை நெறியை சரியாய்ப் புரிந்துகொண்டால் அவதார இரகசியம் புலனாகும்.

ஞானவாசிட்டம்-தேவபூசை கதை, சங்கரன் உபதேசம் (கவி)

தெள்ளறிவெல்லாக்கலைக்கு மெட்டாதெல்லாக் கருத்துஞ் சேர்ந்துண்ணிற்கு
முள்ளதில திரண்டினது சத்தா சாமானியமே யுருவாய்நிற்குந்
தள்ளரிய பெருஞ்சத்தா மாத்திர மெய் யாந்தெய்வந் தானுமீதே
எள்ளரிய விது விகற்பவடிவாகிலுணர்வுருவை யிழந்து வேரும்

சத்தம் பிறந்த தலம்—கருத்து
கருத்திலிருப்பவன் கருத்தன் —நக்கீரர்

"தன்னுளே உலகங்க ளெவையுந்தந்து
அவை தன்னுளே நின்று
தான் அவற்றுள் தங்குவான்" —கம்பர்

கருத்தன் (தற்பதம்)

அரக்கர் கொடுமைகளைச் சகிக்கமுடியாத தேவர்கள் கூடி ஆலோசனைசெய்து அரூப சொரூப மெய்ப்பொருளைத் தியானிக்கின்றனர் எண்ணிய எண்ணியாங்கெய்தும் பரமன் தேவர்கள் சிந்தனைப்படி திருமால் வடிவில் காட்சி தந்து அருளியபடி அயோத்தியில் தசரத குமாரனுக அவதரிக்கின்றனர். சகல கலையும் கற்று முடிந்தபின் தீர்த்த யாத்திரை செய்து முடித்து வந்துசேர்ந்தபோது இராமன் வயது பதினைந்து முற்றுப் பெற்றது. மண்ணுலக வாஞ்சை மாயாசம்பந்தத்தால் பூர்வக்ஞானத்தில் குழப்பம் ஏற்படவே உலக வாழ்க்கையில் வெறுப்பேற்பட்டு கிலேசத்துடன் உள்ளசமயம் அரக்கர் அழிவிற்கான அகோர கோபக்கொதிப்பின் அத்திரங்களுதிக்கும் தவ வேள்வி செய்வதற்காக விசுவாமித்திரர் அகோர கோபக் கொதிப்பின் அத்திரங்களைத் தடுத்துத் தாங்கும் கருணமூர்த்தியான இராமனை தசரதனிடம் கேட்கிறார் செய்தி கேட்ட தசரதன் வருந்தி. வசிட்டருடன் கலந்து இராமனை அழைத்துவரும்படி சேவகரிடம் கூற, செய்தியறிந்த இராமன் சபைக்கு வந்து முறைப்படி யாவரையும் வணங்கி அமருகின்றனன். இராமன் வாட்டத்தையறிந்த முனிவர்கள் காரணம் கேட்க இராமன் கூறுகின்றன் இந்த சகம் பல்லாயிர கோடியண்டங்கள் ஆதரவற்றதுபோல் வான வெளியில் தன்னைத்தானே சுற்றிக்கொண்டுள்ளன இது எப்படி? ஆதாரம் இருப்பதெப்படி? கண்ணுடியுள் தோற்றும் பிரதிபிம்பம் போலவுள்ள புவனத்திற்குக் காரண மூலப்பொருள் ஒன்று உள்ளதா? அது எங்கே எப்படி அறிவது? அயன், அரி, அரன் முதலிய யாவரும் மறைந்துவிடக்கூடியவராக இருப்பதால் அழியாத் தன்மையுள்ள பொருள் யாது? என்ற பற்பல சம்சய வினக்கள் கூறக்கேட்டிருந்த வான்கோளவாச சித்தர்கணங்களும் ஆர்வங்கொண்டு தசரதசபையிலிறங்கி அளவளாவி அமருகின்றனர். இராமனுடைய அபூர்வ கேள்விகளைக்கேட்டு ஆச்சரியங்கொண்ட சித்தர் கணங்கள் இனி முனிவர்கள் பதிலும் அறிந்து ஞானம் பெறலாம் என்று ஆனந்தத்துடன் இருந்தனர்.

இராமன் நெறிநிலையையறிந்த விசுவாமித்திரர் தக்க ஆறுதல் கூறி வசிட்டரே உபதேசம் செய்வதற்குரியவர் என்றபடி உபதேசம் செய்கிறார். விரிவு ஞானவாசிட்டத்தின்மூலம் நன்கு அறிவீர்கள்

தாரக பிரம அணு வெளியில் — பல்லாயிர கோடி பிரமாண்டங்கள் சலனமின்றி இளைப்பாறிக்கொண்டுள்ளன. கோடானு கோடியண்டங்கள் செயற்படுகின்றன. திருமால், பிரமா, சிவன் இந்திரன் முதலாகிய தேவாதிதேவர்கள் அண்டகோள சீவகோடிகள் யாவும் (தற்பத சொரூபத்தில்) மயிர்ப்பந்திகளாம். சுயஞ்சோதியான தாரக பிரமத்தின் ஆதியந்தமில்லாத படிவமிதுவாம்.

கவி

எண்ணில்கோடி பிரமாண்ட மிதயத் தொருபாலிளைப்பாறும்
வண்ணவொளிசேர் பரவிசும்பின் பாராபார வடிவிதுவாம்
கண்ணன் பிரமன் சிவன் மகவான் முதல் வானவரார் கவின்பெறுமிவ்
வண்ணல் வடிவி லுரோமநிரை யாகுமிந்த வனைத்துயிரும்,

தாரக பிரம அணு சகத்வடிவம், உணர்வு மயம், அறிவின் ஒளி வடிவம். எண்ணிய எண்ணியாங்கு மாறுபட்டு விளங்கும் சகசால தோற்றம் ஒன்றே தற்பதம் என்பதும் இதுவே. எண்ணம் என்ற திரையில் பிரதிபிம்பிப்பதே சகத்தோற்றம் எண்ணம் இங்கு கண் மணியில் செயற்படுகிறது. கண்ணாடியில் உள்ள பிரதிபிம்பத்திற்கு எப்படி ஆதாரம் தேவையில்லையோ அதேபோன்ற இந்த சகத்துக்கும் ஆதாரம் தேவையில்லை. நீ புறத்தோற்றத்தைவிட்டு அகமுகமாகத் தற்பதத்தே கலந்தால் புறத்தோற்ற சகம் மறைந்துவிடுகிறது. அபாரபரவடிவ அணு நீயாகவே இருப்பதையறிவாய் சஞ்சலச் சிற்றறிவு பேரொளிமயமாகப் பேரானந்த சொரூபனாக இருப்பதை யுணர்வாய். எல்லாம் நீயே என்ற பூர்வநிலையை அடைவாய்; அடைந்து செயலாற்றுக என்றார்.

பூரண ஞானம் பெற்ற இராமன் தன் சுயநிலையான!

" வேதங்கள் காண்கிலாமை வெளிநின்றே மறையும் வீரன்
பொய்யுடையுள்ளத்தார் கண்ணுக்குப்புலப்படாத் தோற்றம் "
" பொய்யுடை உள்ளத்தார் கண்ணில் புலப்பட்டுள்ள தருணத்தும்
அவன் மெய்நிலை யறிதற்கியலாத வியனுருவன் "

"தோள் கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமலமன்ன
தாள் கண்டார் தாளே கண்டார். தடக்கை கண்டாருமஃதே

வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக்கண்டார்
ஊழ்கொண்ட சமையத்தன்னான் உருவு கண்டாரையொத்தார்''

இவ்வாறு தான் வந்துள்ள அவதார செயலிற்கான பூர்வக்ஞான வசத்தனாய் அறங்காத்தற்கியைப, கொண்டகோலத்திற்கேற்ப நடிக்கிறான்; நடக்கிறான் தற்பதஞான தவத்தால் எண்ணியாங்குதோன்றிய பரமன் தந்த வரம்பற்ற வரம்பெற்ற ஈனர்களை மாறுபாடான வர பலத்திற்கு எதிர்ப்பான தன்மையில் தன் இயற்கை நன்னிலைபிசகாத நெறியில் நின்று அழிக்கிறான் இம்மகத்துவ நெறியறிந்த விசுவாமித்திர முனிவர்

"அரிய யான் சொலில் ஐய! நிற்கு அரியதொன்றில்லை"

என்று ஆச்சரியமடைகின்றார் இந்த மகா தத்துவ பரம ராமன் செல்கின்ற வழியே எதிர்ப்பட்ட கவந்தன்மூலம் சுக்கிரீவன் துணை கொண்டு தேவியை நாடி உன் செயலாற்றுகவென்று கூறியபடி சுக்கிரீவன் நட்புப்பூண்டவுடன் தேவியை நாட சேனைகள் சேகரம் தேவைப்படவே அறத்திற்கு மாறுபட்ட செயலாளன் வாலிவதம் அவசியமாகிறது வாலியின் நிலை, வரம்பற்ற வரபலம், மெய்ப் பொருளல்லாதவற்றை மெய்ப்பொருளென்றுணர்ந்த மருள் நெறி-கற்றறிமோழைக்கயமை நிகரற்றவனென்ற அகந்தை, தர்மநெறிக்கு மாறுபட்ட குடும்ப வாழ்க்கையாதிய இழிகுணமுள்ள இவனை இராமன் தன் இயற்கை நிலை நியதியின்படி (வெளிநின்றே மறையுந் தன்மையில்) வாலியின் முன்னின்று தாமதித்து

"கடித்தடத்தினும் கழுத்தினும் தன்னிரு கரங்கள்
மடுத்து மீக்கொண்ட வாலிமேல் கோலொன்று வாங்கித்
தொடுத்து நாணொடு தோளிறுத்தி ராகவன் துரந்தான் "

யுத்த நீதிக்கு மாறுபட இரண்டு உயிர்நிலையும் பாதிக்குமாறு சுக்கிரீவனைப்பிடித்துத் தூக்கிய வாலியின்மீது வில் நாண் தோள்வரை வரும்படி இழுத்து விடவே எந்த தேவாத்திரங்களும் புகாத வரபல கவசம்பூண்ட வாலி மார்பில் அழுகிய வாழைப்பழத்தில் ஊசிபுகுவது போல் இராமபாணம் செல்கிறது. வெற்றிவீரனாகிய வாலிக்குச்சந்தேகம் வருகிறது. என்ன சந்தேகம்! சிவபெருமான் தந்த வரபல கவசத்தைத்துளைத்துச் செல்லும் இந்த பாணம் யாருடையது? இவன் யார்? யாராக இருக்கலாம்? என்ற சுடர்ஞானத்தெளிவில் தாரகப் பிரமமே இராமன் என்றும், இவன் நாம தாரகமந்திர தியானபலமே சிவன் கொடுக்கும் வரம் என்றும், தாரகமந்திரதியான

பலசக்தி, தாரகபிரமமே எதிர்ப்பாக வருகிறபோது அவ்வரம் அவனில் ஐக்கியப்படுமென்றும் உள்ள உண்மை புலப்படவே புலப்படாதிருந்த இராமன் புலப்படுகிறான் அறத்திறனழியச் செய்யான் புவியிடை அண்ணல் (முதன் மூலப்பொருள் என) உணர்ந்தனன். வணங்கியவாறு மோட்சம் பெறுகிறான் என்பதே.

> ...."வீட்டுவதிமைப்பினன்றே
> மாட்டுவானொருவனன்றே இறுதியின் மனத்தாலென்றான்"

பாணம்விடவேண்டிய அவசியங்கூடயில்லை. மனமாயைத்திரையை ஒடுக்கினால் சகம் மறைந்துவிடும். கொண்டகோலத்திற்கேற்ப தர்மத்தை நடத்திக்காட்டுவதற்காக ஓர் பாணம் செலுத்தினான்.

நூலாசிரியர்
தமிழ்ச்சித்தர்
E. S. இராமசாமி

FACT

This is an earnest exact reflection of the pent-up emotions of a sincere and ardent observer Sri. E. S. Ramaswamy was first met by me one evening myself as a patient suffering from physical pains and mental agonies What thoughts and doubts were deeply buried in my mind had been explained by him even without my vocal expressions. My doubts were removed even without my saying it I only then experienced what is called "Gnana Drishty" in this great sage and Sivayogi I was fortunate enough to meet him twice, with peculiar doubts. Thrice, astonishingly, without my request even in his talk with me all my doubts were cleared He gives medicines to the mind by devine talks and prepares the mind first ready to obsorb the medicines He then, administers effective devine medicines to cure physical ailments Of course he is of opinion that mind is the root cause for all diseases.

One of the speeches, is now in look form. Tamil Nad is gifted with such a siddha rare to be seen even if searched. But it is our duty to properly, sincerely and faithfully follow his teachings to attain santhi the devine nectar.

D. R. SRENEVASAN, (M. A.)
OFFICE MANAGER,
Sri Jayaram Motor Service,
RAJAPALAYAM.

வியப்புரை

ஸிசயோகி E. S. இராமசாமி அவர்களாக்கிய இந்நூல் கம்ப நாட்டாழ்வார் அருளிய இராமாயணத்தின் நுட்பசாரமாகும், வாலியை (இராமன்) மறைந்திருந்து எய்யவில்லை என்ற காவியம். இதை நான் பார்த்தேன்; நேரில் படிக்கக் கேட்டேன்.

திரு. E. S. இராமசாமி அவர்களை முதலில் ஒரு சித்த வைத்தியராக அணுகினேன். மனவியாதியும், உடல் வியாதியும் சேர்ந்து அவதிப்பட்ட என் சந்தேகங்களுக்கும் எண்ணங்களுக்கும் நான் சொல்லாமலே விளக்கந்தந்த அபூர்வஞான சிவயோகியாக நேரில்கண்டு புளகாங்கிதம்பெற பாக்கியம் பெற்றேன். ஒரு தடவைபோல மூன்று தடவைகள் அனுபவித்தேன்.

தெய்வீக வாக்கால் மனதைச் சாந்தப்படுத்தி மருந்தை ஏற்கும்படி தயார் செய்த பின்புதான் அற்புதமான மருந்துகள் கொடுத்தார்கள். இப்படி வந்த வாசகங்களில் ஒன்றுதான் இன்று இந்தப் புத்தகமாக வெளிவந்துள்ளது. காணக்கிடைக்காத சித்தர் இவர். தமிழ்நாட்டின் பாக்கியம். நாம் இவர் காட்டும் பாதையில் திரமாகச் சென்று தெய்வீக சாந்தியை அடைவோமாக.

D. R. **சீனிவாசன்,** M.A.,
ஆபீஸ் மேனேஜர்,
ஸ்ரீ ஜெயராம் மோட்டார் சர்வீஸ்

இராஜபாளையம்
4—1—1970

வாலி கதி

கடவுள் தத்துவம்

மூன்றுரு வெனக்குண மும்மையா முதற்
றேன்றுரு வெவையுமிம் முதலைச்சொல்லுதற்
கேன்றுரு வமைந்தவும் இடையில் நின்றவர்
* சான்றுரு வுணர்வினுக் குணர்வ தாயினன்

(எ-து) இம்முதலைச்சொல்லுதற்கேன்றுரு வமைந்தவும் – இறைவன் ஒருவன் உண்டென்று கூறுதற்கியைப உள்ள அபூர்வ தோற்றங்களாகிய கிரக அண்டங்களாதியனவும்

மூன்றுருவெனக்குண மும்மையா முதற்றேன்றுரு வெவையும் — முதற்சொரூப மூவரை முன்னிட்டுண்டாகிய முக்குணத்தோற்றங்களியாவும் (தூல சூக்கும காரண சிந்தனைகுணிவடிவம்)

இடையில் நின்றவர் சான்றுரு உணர்வினுக்குணர்வு– நடுநிலையினின்றவரிடஞ் சார்ந்த அகமுகநோக்கப்பேரறிவிற்கு அறிபடுபொருளாக உள்ள உணர்வே தெய்வம்.

அது ஆயினன் —மேலே கண்ட யாவுமாக அமைந்தான் என்ப.

(க–ரை) அடியும் முடிவும் இலாச் செய்ப்படா உணர்வே தெய்வம்

"நன்று தீதென்னர் சாட்சி நடிவான சீவன்முத்தர்"

—கைவல்யம்

சத்பாத்திரங்கள்

(1) இராமர்
(2) விசுவாமித்திரர்
(3) வசிட்டர்
(4) மன்மதன்
(5) சடாயு
(6) மாலியவான்
(7) இராவணன்
(8) கவந்தன்
(9) வாலி
(10) பரசுராமன்
(11) அனுமன்
(12) சுக்ரீவன்
(13) பிரகலாதன்
(14) அகத்தியர்

நூற்கள்

(1) ஞானவாசிட்டம்
(2) திருக்குறள்
(3) கம்பராமாயணம்
(4) ஔவைக்குறள்
(5) சித்தர் மொழிகள்
(6) கைவல்ய நவநீதம்
(7) பாரதியார்

---

* கம்பராமாயண பதிப்பாசிரியர்கள் முற்கால ஏட்டுப் பிரதி செய்தவர்கள் தற்பத நெறி அதற்குரிய சொல் உள்ள உரியயிடங்களில் வேறு சொற்களைப் புனைந்து, புனைந்துரை தவருக எழுதியிருப்பது வருத்தத்திற்குரிய செயல். தற்பத ஜீவன்முக்தனை நாடி விளக்கந் தெரிந்து செய்வது உசிதம் உலகநலம ('தம்மையே தமக்கு நல்கும்' என்பன போன்றவை)

இராமன் நெறி (ஞா வா)

(1) ஒருங்குணர் குரவனும் உயர்வான்மீகனை
மருங்குறப் பரத்துவன் வணங்கி வன்பவ
நெருங்கி வெந்துயரிலே நின்றதெங்ஙனம்
அருங்குணத்து இராமன் நீ அருளில் கூறென்றான்

(எ-து) முற்றுமுணர்ந்த ஆசிரியராகிய மேலான வால்மீக முனிவரை யடைந்த பரத்துவாசமுனிவர் வணங்கி கொடிய பிறவித் துன்பத்தில் அரிய சத்வகுணத்தைப்பெற்ற இராமன் இருந்ததெப்படி? தேவரீர் கிருபையுடன் அநுக்கிரகம் செய்யவேண்டுமென்று மென்மையாக விண்ணப்பித்தார்.

(2) நல்லது சிறுவன் நீ உரியை நானது
சொல்லுவன் கேட்குதி துயர்செய் மோகம் நீ
வெல்லலாம் மோகந்தான் சகத்தின் வேறன்றி
மல்லல் வானிறம் படைத்தென்ன வந்துறும்.

(எ-து) நன்மை மிக்க புதல்வனாகிய பரத்துவாசனே! நீ கேட்ட கேள்வி பேரின்பத்தை விளைவிக்கு நன்மையுள்ளது. நீயும் கேட்பதற்கு உரித்தான சாதன சம்பத்துள்ளவன் யான் அதைச்சொல்லுவேன் கேட்பாயாக! துன்பம்தரும் அஞ்ஞானத்தை நீ செயிக்கலாம் மோகமானது சகத் சம்பந்தமாய் வளமை தங்கிய வானத்தில் இல்லாத நீலநிறம் உண்டானதுபோல பிரமத்தினிடத்திலில்லாதது வந்து பொருந்தும்.

(3) இறப்பிலா இந்த மோகம் இறையுமீட் டெண்ணமின்றி
மறப்பதே நல்லதென்று மதித்துயர் மனத்தினுக்குத்
திறப்படக் காணப்பட்ட தில்லெனச் சித்தினாலே
உறப்பெறு மெப்போதப்போ துயர்பர சுகமதாமே

(எ-து) நித்தியமாகக் காணப்பெற்ற இம்மோகமாகிய சகத்தை எவ்வளவேனும் திரும்ப நினையாமல் மறந்துவிடுவதே நன்மையென்று நிச்சயித்து, நீண்ட மனதுக்கு; உள்ளதுபோலத்தோற்றப்படும் இந்த சகமானது யதார்த்த நிலையில் இல்லவேயில்லை. இல்லையென்ற எதார்த்த ஞானம் உண்டாவது எப்போதோ அப்போது பரமானந்த பதமாகும்

(4) வழிபடு மிதனைவிட்டு மற்றுள்ள நூல்களென்னும்
குழிகளிற் புறண்டஞ்ஞானக் குணத்தினாற் பிறப்போர்க்கெல்லாம்
ஒழிவற ஒருவர் செய்தற் குரித்தொன்றாய்த் தானேயுண்டாங்
கழிதலிற் பரமவின்பம் கற்பங்களாலும் கூடா

(எ-து) நீக்கமற்றியங்கும் தற்பதம் மற்றெருவராலும் ஆக்கற்குரிய தல்லாததாகும். தன்னைத்தானே ஆக்கிக்கொள்ளும் பேரருள் நிலை. இதன் உள்நோக்கறிவை விட்டு மற்ற சாஸ்திரங்கள் என்கிற படுகுழிகளிலுழன்று அறிவின்மையாகிய புறநோக்க குணத்தினுல் பிறப்பவரனைவர்க்கும் எக்காலத்தும் ஞானம் பொருந்தாததாகும்.

(5) ஆன்றதோர் சீவன்முத்திப் பதத்தினை யடைந்திராமன்
பூன்றமா மனத்தனுன நெறியினைப் புகலக் கேட்பில்
சான்றவிக் கேள்வியாலே சரை மரணங்கள் தீர்தி
தோன்றலே யென வான்மீகித் தொன்முனி சொல்லலுற்றுன்

(எ-து) மாட்சிமையுள்ள சீவன்முத்தித் தன்மையை யடைந்து இராமன் பூரணமகாமனதுடனே யிருந்த மார்க்கத்தைச்சொல்லக் கேட்குமிடத்தில், தற்பத நிலைபெறும் பேரறிவினுல் சரா மரணங்களை நீங்கி வாழ்வாயாக! புதல்வனே!! என்று வான்மீக முனிவர் சொல்லத் தொடங்கினுர்.

நூற்பயன்

(க-ரை) இதைக்கேட்பதாலேயே பரத்வாச முனிவருக்கு சரா மரணங்கள் நீங்கி வாழ்வாய், என்று வான்மீக முனிவர் ஆசி கூறுவதுபோல் அமைந்துள்ளது. படித்துப் பயன்பெறுவீர்களாக

இராமன் தீர்த்தயாத்திரை விரும்பல்

நான்குவேதங்களையும் மற்ற சகல சாஸ்திரங்களையும் கற்று அப்பியாசித்து விளையாட்டினுல் யாது பயமுமின்றி யிருந்தார். மேகவர்ணனுன தாமரைக்கண்ணையுடைய இராமன் புண்ணிய தீர்த்தங்களனைத்தையும் முனிவராச்சிரமங்களையும் தரிசிக்கும்பொருட்டுத் தந்தையாரை வணங்கித் தன் எண்ணத்தைத் தெரிவித்துக்கொண்டார். தசரதன் வசிட்டருடன் யோசித்துச் சீக்கிரம் போய்வாவென்று சொல்ல மேக சொரூப இராமன் தம்பியருடன் சுபதினத்தில் புறப்பட்டு பரவிய நதிகளையும் தவ வனங்களையும். துறவிகளாச்சிரமங்களையும் தரிசித்து அவரவர் செயலும் நினைவும் முடிவும்பற்றி சிந்தித்தவண்ணம் அனைவரும் புகழ்ந்து துதிசெய்ய அயோத்தியை வந்துசேர்ந்தார். அப்போது இராமன் வயது பதினைந்து பூர்த்தியாயிற்று.

ஓர்நாள் ஏற்பட்ட சிந்தனை

சகத் தோற்றங்கள் என்ன? எப்படி?

அளவிடற்கரிய அண்டாண்டங்கள் நிராதாரவாகச் சுழல்கின்றனவே இதற்கு யார் ஆதாரம்? சகத்தோற்றம் உண்மையா? உண்மையாக இருப்பின் தூண்போன்ற ஆதாரம் தேவைப்படுமே? ஆதாரம், ஆதாரத்திற்கு ஆதாரம்! என்றே சென்றால் முடிவு ஆதாரமின்மையாய்விடுமாதலால் ஆதாரமின்றியே தாங்கும் பொருள் ஒன்றுஇருக்க வேண்டும்; அது எது? அதை அறிவதெப்படி? நான் யார்? நான் எதற்காக வந்திருக்கிறேன்? செய்கையினால் ஏற்படுவது இன்பமா? அழிவற்ற நிலையான இன்பம் பெறுவதெப்படி? என்ற சிந்தனை வயத்தனாகி செயத்தக்க செயல்கள் யாவும் விடுத்து புத்தி தளர்ந்து யாரிடமும் பேசாதவராகி எழுதின சித்திரம்போல் சதாகாலமும் இருப்பதைப்பார்த்த பரிசனங்கள் வணங்கிவேண்டிக்கொள்ள நித்திய கன்மங்களை மாத்திரம் செய்து வந்தார்.

இவ்வாறிருக்கும் நாளில், உலகம் புகழாநின்ற அபாரதீர வேக ஞான விசுவாமித்திர முனிவர் (தன் பிறப்பின் அதிசயகாரியமிதுவென அறிந்தபடி) தசரதமகாராஜா சபைக்குட் பிரவேசித்தனர். தசரதன் அவரை வணங்கி தோத்திரஞ்செய்து உபசார ஆராதனைகள் முறைப்படி செய்து விசுவாமித்திர முனிவரைப் பார்த்துக் கூறுகிறார் அடியேன் சிந்தியாத காலத்திலும் பேரருளுடன் எளிதாக எழுந்தருளிய தேவரீரது தரிசனத்தினால் வினைகள் யாவும் நீங்கிச் சூரியனைக்கண்ட தாமரைக்கு ஒப்பானேன். இத்தகைய ஒப்பற்ற இன்பத்தை என்றும் அடைந்திலேன். வாடிய பயிருக்கு மழையும், தரித்திரனுக்கு அகப்பட்ட செல்வமும், அஞ்சி ஒடுங்கிய அனைத்துக்கு ஆதரவும்போல தங்கள் வருகை ஒத்திருக்கின்றது. தங்கள் தரிசன சுகமானது தேகமுழுமையும் ஆகாய கங்காசலம்போல் குளிர்விக்கும் படியிருந்து என் உள்ளத்தின் தளர்ச்சி யாவும் நீக்கிவிட்டது

மகா தத்துவத்தையுடைய தாங்கள் எழுந்தருளிய வரவானது அதிசயமாகும், தாங்கள் நினைந்தது யாதோ அதை அவ்வாறே செய்யக்காத்திருக்கிறேன். அறிவிக்கவேண்டுமென்று கேட்டபின் அன்புடன் விசுவாமித்திரர் சொல்லத்தொடங்கினார். அரசர்களடி பணிய வாழ்வின்மிக்க மாண்புள்ள தசரத அரசே! அபூர்வ சக்தியைத்தரும் ஓர் யாகம் செய்யவேண்டும். அதில் தோன்றும்

ஆவேசசக்திகள் பாணங்கள் யாவும் அடங்கி அடைக்கலம் புகும் பேரருட்கடல் (அரக்கர் காலன்) இராமன் ஒருவனே. எத்தேவர் களும் தடுத்தற்கரிய என் காவலினுல் (தவபல சஸ்திரங்களால்) அரக்கர் சேனைகளை இராமன் ஒருவனே எளிதாதக்கொல்வான். அறிவேன்; நீ அறிந்துகொள்க அரசனே பாலனென்கிற அச்சத்தை விட்டுவிடு என்னையொத்த முனிவர்கள் சந்தேகமான செயலில் மனம் வையார்கள் அறியக்கடவாய்.

இராமன் மகிமையை உன்போன்றவர்களும் உலகத்தவரும் அறியத்தக்கவனல்லன். யானும் வசிட்டர்போன்ற மகா தவசிகளும் மும்மூர்த்திகளுமே அறியத்தக்கவர்கள். அம்மகா குணசாலியான இராமனை அனுப்பித்தரல் வேண்டும். அவனுல் அரக்கர்குலம் நாச மடைவது சத்தியம் என்று சொன்னுர்

இதனுல் உம் வமிசத்திற்கே மகிமையும்; யாகம் காத்தலால் அறம் காத்தலும்; அரக்கர் நாசத்தால் புகழும் விண்ணும் மண்ணும் துக்கம் நீங்கி சுகம் பெறும் புண்ணியமும் தவம் நன்கு நடைபெறு வதால் உலகம் லட்சுமி கடாட்சம் செல்வம் பெருகுதலும் உண்டாம் என்ற முனிமொழி கேட்ட மன்னன் முகூர்த்தமொன் றயர்ந்து சோர்ந்து ஆருத்தயருடன் வசிஷ்டருடன் ஆலோசிக்கவே வசிட்டர், தசரதா! பயப்படாதே. அக்கினியால் காக்கப்பெறும் அமுதம்போல விசுவாமித்திரர் இராமனைக் காப்பார்.

அரக்கர் தீமையணுகாது. விசுவாமித்திரரால் உன் மகனுக்கு ஏற்படப்போகும் இன்பமான செயல்கள் எதிர்நோக்கிவரப்போகி றது எனக்கூறக்கேட்ட வலிய புயத்தையுடைய தசரதனின் ஊச லாடும் உயிர் ஒருநிலை பெறவேபெரியோர்கள் கிருபையினுல் கிடைத்த இராமன் என்ன செய்துகொண்டிருக்கின்றுனென்று இராமனது பரிசனங்களைக் கேட்க ஏவலாளர் அழகிய கைகளைக்குவித்துக் கொண்டு இராமன் தீர்த்த யாத்திரை தீர்ந்துவந்த நாள்முதல் அடைந்திருக்கின்ற நிலையைச்சொல்லுகிறுர்கள்.

கவி

(6) இடரில் பதமொழிந்தபல தொழிலாற்போம்
    வாணுளென் றிரங்கிப் பாடும்
அடர்செல்வம் ஆபத்துக் கிடமென்றே
    ஆசை தவிர்ந்தியார்க்கு மீயும்
படர்கின்ற கருத்தறியேம் இவர்க்கு யாரே
    நற்குணங்கள் பயிற்ற வல்லார்
தொடர் செய்கை யிதுவென்று தொழுதுரைத்தார்
    முனிகேட்கச் சொல்வதானுர்

(எ-து) துன்பமில்லாத தற்பத நீங்கிய நானாவிதமான செய்கைகளி னால் ஆயுளானது வீணே கழியுமென்று துக்கத்துடன் சொல்கின் றார். நிறைந்த சம்பத்தானது ஆபத்துக்கிடமானதென்று ஆசை யின்றி சகலருக்கும் கொடுக்கின்றார். பரந்த உட்கருத்து யாதென்று யாங்களறிந்திலோம். இவ்விளவரசருக்கு நற்குணங்களைக் கற்பிக்க வல்லவர் யாவர்? இப்போதுள்ள செயல் இதுவென்று வணங்கிச் சொன்னார்கள். இதைக்கேட்ட முனிவர் சொல்லத்தொடங்கினார். மகத்தான செல்வன் இராமனை இங்கு அழைத்துவாருங்கள் இப் போது அவனுக்கு உண்டாயிருக்கிற மகாமோகமானது ஆசையாலும் வந்ததன்று சொல்வதற்கரிய விராகத்தினாலும் விவேகத்தினாலும் வாராநின்ற ஞானசம்பத்தாம் குற்றமற்ற ஆத்மவிசாரணைக்குரிய பல யுக்திகளால் மயக்கம் நீங்கி எங்களைப்போல தற்பதத்தில் (பிரம பதத்தில்) சாந்திபெறுவன். இராமன் சபைக்கு வந்து வணங்க தசரதர் ஆறுதல் கூற வசிஷ்டர் கேட்கிறார் செயித்தற்கரிய முயற் சிக்கிடமாகிய விடயக்களென்கிற சத்துருக்களை மிக எளிதில் செயித்த அதிசூரனே கலங்குகின்ற அறிவில்லாதவர்களுக்குரியதா யிருக்கின்ற அஞ்ஞானம் நிறைந்த மோக சமுத்திரத்தில் வீழாதே என்று சொன்னார்

விசுவாமித்திரர் சொல்லுவார்

நல்ல மனையை எலி அழிக்கும் அழிவுபோல நீ மோகத்தினால் துன்பப்படும் காரணமென்ன? சொல்வாயாகில் அது நீங்கி நீ இச் சித்திருப்பதெதுவோ அதனை அடையச்செய்வாம் என்றார்.

இராமன் சொல்வது

(7) தந்தையிவரிற்பிறந்து வளர்ந்து பலகலை தரித்துச்சதாசாரத்தால்
வந்துயர் நன்னதியாடி வாரிதிசூழ் புவியுழன்று வருதலோடும்
இந்த நெடுஞ்சக மோகத்திச்சை யெலாந்தீர்ந்த திதிலின்பமில்லை
அந்தமுறல் பிறப்பதற்கே பிறப்பது மீட்டிறப்பதற்கே அநித்த
மியாவும்

பிதாவாகிய இத்தசரதனது மனையில் உதித்து வளர்ந்து சகல வித்தைகளையும் அப்பியாசம் செய்து நல்ல ஆசாரப்படி நடந்து மேலான புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து சமுத்திரம் சூழ்ந்த பூமியை பிரதக்ஷணம்செய்துவரவும் இந்நெடிய சகத்தின் ஆசைகளனைத்தும் நீங்கிற்று. இச்சக வாழ்வில் இன்பமேயில்லை. பிறப்பது இறப்பது—இறப்பது பிறப்பது யாவும் மித்தையாம் (பொய்)

(8) பாவமதா யாபத்துப் பலியிடமாய்த் தம்மிற்றும் பற்றின்றுயுந்
தாவுமனக்கற்பனையாற் சம்பந்தமா யிருப்புச்சலாகைபோலாய்
மேவுபெருஞ் செல்வத்துக்கிடமாகி யெப்பொருளும் விடயத்தாலும்
பூவலயத்தாலு மெதுபயன்? யாமார்? வருவதெது பொய் பொய்
பொய்யாம்

பாபமே ரூபமாகியும், ஆபத்துக்களோ தொடர்ந்துவரும் தானமாகியும், ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாததாகியும் (காதற்பொருளை நாடித்)தாவித்தாவி ஓடாநின்ற எண்ணத்தில் சப்பந்தமாயும், இருப்புச்சலாகைபோன்ற வன்மையாகப்பொருந்தாநின்ற மகாசம்பத்துக்குத் தானமாகின்ற சகலமும் விடயபோகத்தினாலும், இராச்சியத்தினாலும் என்ன பிரயோசனம்? யாமார்? வரப்போகின்றது என்ன? என்று விசாரிக்கின் இச்சகலமும் பொய்யேயாம்.

(9) கருமவகையால் விரிந்த காமாதிப்பாப்புரைப்பாற் காதனீங்குந்
திருவெனுஞ்சூறைக் காற்றூற் பனிபோலச்சிதருதோர் சேரார்,
சேர்ந்தோர்
இருவகைக்குங் குளிர்ந்தினிய னன்றி யறிவோ ரறிஞரெளியோர்
சூரர்
பொருவிலெவருந்திருவாற் புழுதிசெறி சுடர்மணிபோற் புன்மை
சேர்வர்

கர்மபேதங்களால் மிகுந்ததாயும் (காமம் வெகுளி) இராகத்துவேடங்களென்னும் விடத்தினால் சத்துக்களின் வாக்கியமுதங்களின் இன்பரசமே கைப்பாக மாறுதலாகச் செய்யும் செல்வமென்னும் சுழற்காற்றினால் பனியைப்போல (பனிசூழ்ந்து மறைப்பதுபோல) அறிவு மயங்காதாரார்? பிற சனங்களும் சுயசனங்களுமாகிய இருதிறத்தவர்களுக்கும் குளிர்ந்த இனிமையுள்ளவர்களும் செய்நன்றியறிபவரும் அறிவுடையவரும் எளியவர்களும் வீரர்களும், சமானமில்லாத ஏனையோரும் செல்வமென்னும் புழுதியால் மறைவுற்று மாசுள்ள இரத்தினம்போல ஈனமடைவார்கள்.

(10) தீதடையாச் செல்வர் மொழிதிறம்பாத சூரர் நடுத்தெரிந்து
நோக்கு
நர்தரிவர் மிக அரியர் நாகஞ்சூழ் குழிவல்லி நுனைபோற் செல்வஞ்
சாதனத்துக்கரிதுளத்தை யிழுத்திமைப்பிலிலுறுந்தலைகீழ்த்
தளிரினின்ற
ஒதுதுளியொத்தவுயிர் மத்தரென வகாலத்தி லுடல் விட்டோடும்

(எ-து) இந்த உலகத்தில் குற்றமற்ற செல்வர்களும், சொற்றவராத வீரர்களும் சமநோக்க விசாரணை அரசர்களுமாகிய இவர்கள் மிகவும் அரியர்கள். மனதைக் கிரகிப்பதாயும் கணத்திலொழிவதா

யும்மிருக்கின்ற செல்வம் சர்ப்பங்கள் சூழ்ந்த கிணற்றுள் உள்ள கொடியின் அரும்பைப்போல் பயனற்றதாம். தலைகீழாயிருக்கின்ற இலை நுனியிற்றொங்கிய மழைத்துளிக்கொப்பாக பிராணனானது உன்மத்தனைப்போல காலமல்லாத காலத்தில் தேகத்தைவிட்டு ஓடிப் போகும்.

நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை பிறங்கிற்றுலகு —குறள்

(11) வளர்புலமா மாசுத்தீண்ட மனமயர்வோர் மெய்யுணர்வு
வாய்த்திலாதோர்
தளர்வுறுகாரணம் வாணுட்டனிமோக மெனுமுகிலிற் சார்மின்
போலும்
அளவுபடு முடல் மெய்யென்றமுழுந்திநா மிதின்மகிழே
மாகாயத்தைப்
பிளவிட வாயுவைப் பிடிக்கத்திரைநோக்கவெளிதிதனை
பேணவொண்ணு

(எ-து) வளர்கின்ற ஐப்புலமென்னும் சர்ப்பம் தீண்ட மனம் தளர்பவர்களும் மெய்யுணர்வு (உண்மை ஞானம்) அடையாதவர்களுமான இவர்களின் (ஆயுள்) சரீர நைதற்கே உரித்தானதாகும். பாலன், குமரன், விருத்தன் என்ற அளவில் நிறையே (மாறுபட்ட) ஓர் அளவில் உள்ளதாகும் சரீரத்தை மோகமென்கிற மேகத்திற்றோன்றும் மின்னலைப்போன்ற சீவன் ஆயுளில் மகிழவேண்டியதேயில்லை. ஆகாயத்தைப்பிளக்கவும், காற்றைப்பிடிக்கவும், அலைகளைச்சேர்க்கவும் சுலபமாய் இயலும். ஆயுளை நிலையென விரும்பக்கூடாது.

(12) அடையவேண்டியதடைந்து மேற்றுயரமற்றின்ப மளவிலாதாய்
கடையதாந்தருவிலங்கு பறவைகள்போல் வீணாள்கள் கழியாதாகித்
தடையிலா மனத்தால் வாழ்வதே யுயர் வாணாள் சனனம்
தீர்ந்தோர்
உடைய பிறப்புயர்த்ததாம் கிழவேசரிப்பிறப்பாமுற்றதெல்லாம்

(எ-து) கடைப்பிறவியான தாவரங்களும் மிருகங்களும் பட்சிகளுமாகிய இவைகளைப்போல வீணாகக்காலத்தைப்போக்காமல் அடையத்தக்க ஆத்மஞானத்தை அடைந்து மேல்வரும் துன்பமற்று அளவற்ற ஆனந்தத்துடன் தடையற்ற ஆத்ம விசாரத்துடன் இருப்பதுவே மேலான ஆயுளாம். மறுபிறப்பை ஒழிந்தவருடைய சனனம் மேலானதாம். ஏனைய பிறப்பினர் யாவரும் கிழக்கழுதையின் பிறவியாம்.

(13) வேரறு பொய்யாய்ச் செறிந்தவடிவாகி விசாரத்தால் விரோத
மாகுங்
கோரமனம் பேய்பிடித்த சிறுவரைப்போல் பலதொழிலில்
கூட்டா நிற்கும்
பாரகன்று பாதலம்போம் பாதத்தினின்றகன்று பாரின்மீளுஞ்
சோரமனங் கிணற்றுமரம் பழங்கயற்ற லெடுப்பதுபோற்
றெழிலுற்றன்ளும்

(எ-து) காரணமில்லாத பொய்க் கற்பனை வடிவமாய் எங்கும் பரவி விசாரணையில் வேறுபடும் குரூரமனம், பிசாசம்பற்றிய பாலரைப் போல என்னை நானாவிதமான செய்கையில் கூட்டுகிறது. (உடனுக்குடன்) பூமியிலிருந்து பாதாளத்துக்குச் செல்கிறது. பாதாளத்திலிருந்து பூமிக்குவரும். இந்தக் கள்ளமனமானது கிணற்றில் கிடக்கும் மரத்தை நைந்த கயிற்றால் கட்டி எடுப்பதுபோல என்னை உயர்வு தாழ்வான விருத்திகளில் முறை பிறழத் தள்ளுகிறது.

(14) கடுமனவன்பேய் கனலிற்கொடிதாகு மலைகளினுங் கடத்தற்
கொண்ணு
நெடுவயிரத்தினும் வலிது கடல்பருகி மேருவினை நேரே பேர்த்துச்
சுடுகனலை விழுங்குகினு நிறுத்தரிது புனல் முழுதுந்தோன்று மூலங்
கெடுமூலகீ துண்டெனினுண்டிலதாகி லிலதிதனைக்கெடுத்தல்
வேண்டும்

(எ-து) விடம்போன்ற மனமென்னும் வலிய பேயானது அக்கினியைக்காட்டினும் கொடுமையுள்ளது வரைகளைக்காட்டிலும் கடத்தற்கரியதாம். நீண்ட வச்சிரத்திலும் வன்மையாம். வாரியை குடித்து மேருவைப்பெயர்த்து அக்கினியை விழுங்கினாலும் மனதை நிறுத்தமுடியாது. விடயங்கள் யாவும் உண்டாவதற்கே காரணமாக இருக்கின்றது. மனம் உண்டேல் சகம் உண்டு; மனம் மறைந்தால் சகமே மறைந்துவிடும். மனோ கற்பனைவடிவமே சகம். ஆதலால் மனம் நசிப்பிக்கவேண்டும்.

(15) பைந்தொடியா ராசைநோய் கெம்பீர மனிதரையும் பதுமந்தன்னை
முந்திரவிக் கதிர்போலு மிளிர்விக்குங் கனவிடியின் முளைகூர்
வாளும்
வெந்த விருப்புப் பொறியு மெனக்கொடிய மனவேட்கை
மேருவொத்தோர்
சுந்தரஞானியர் தீரர் சூரரையெல்லா மிமைப்பிற் றுரும்பு செய்யும்

(எ-து) பசுமையான தங்க வளையலையணிந்த பெண்களின் காதல் நோய் ஆழ்ந்த கருத்துடன் ஒடுங்கி மறைந்து வாசஞ்செய்யும் மனிதனையும் சூரியனைக்கண்ட தாமரை மலர்வதுபோல பகிர்முகமாய்

வெளிப்படுத்தும். அன்றி, வச்சிரமுனே, கூருள்ள வாள், உருகித் தெரிக்கும் இருப்புத்துளிகள் கொடுமையைப்போன்ற காதல் வேட்கையால் மேருவைப்போன்ற உயர்ந்தவர்களேயும் அழகான ஞானவான்களேயும் திடமுள்ளவர்களேயும், வீரர்களேயும் மற்ற யாரையும் கணநேரத்தில் அற்பர் நிலேயிலாக்கிவிடும். தன் மதிப்பையிழந்து துரும்புபோலாகி அலேவர் என்ப.

(16) மகரநீர் கடல்குடிக்கும் வடமுகக் கனலே போலச்
சகலமும் விழுங்குங்காலன் சகத்திடை விழுங்காதில்லே
புகலரும் பெரியோரேனும் பொழுதொரு கணமுந்தாழான்
அகிலமும் விழுங்கித்தானே அகிலமாய் நிற்குமன்றே

(எ-து) மீன்கள் நிறைந்த கடல்நீரை வற்றச்செய்யும் வடமுகாக்கினியைப்போல எல்லாவற்றையும் நுங்கும் காலம் (காலனுல்) உலகத்தின்கண் புசிக்கப்படாததில்லே. சொல்லுதற்கரிய மகத்துக்களாயினும் நியதிக்குப்பின்னர் ஒருகணநேரமும் பொருன் சகலத்தையும் விழுங்கிவிட்டு அவனே எல்லாமாயிருப்பன் என்ப.

(காலம்-கிரகாசாரம்)

(17) விழுமியர் சுபத்தின்பாலர் மேருவை யொப்போ ரெல்லாம்
பழுதறு கருடன் கொல்லும் பாம்பெனக் காலன்கொல்லும்
புழுதியோடிலேதுரும்பு பொன்மலே புணரி வெள்ளஞ்
செழுமயேந்திரமுங்காலன் சிதைத்துத்தன் வடிவமாகும்

(எ-து) சிறந்தவர்கள் நன்மைக்கேயுரிய பிரமாதிகள், மேருவையொத்த விருத்திராசுரன் போன்றவர்களேயும் சர்ப்பத்தைக்கொல்லாநின்ற கலுழனேப்போலக் காலனழிப்பான். தூகள் இலே துரும்பு பொன்மலே சமுத்திரம், செழித்த மயேந்திரகிரி இவை முதலான யாவற்றையும் காலனுனவன் கெடுத்துத் தன் வசமாக்குவன் எ. ம்.

(18) பெரியவர் நண்பதிதூரஞ் செல்கதிகிட்டா துண்மை பெறற்
கொணுதாம்
கரியமனமோகிக்கு உண்மகிழ்ச்சி தூரமதாங் கருணேதோன்ரு
விரியுமிழிவதிதூரத் தினுமணுகு நிலேமைபோய்வேரும், வீழ்வோர்
திரியவுடனெழுவர் சிறியவர் கூட்ட மெளிதரிது தெளிந்தோர்
கூட்டம்

(எ-து) மகான்களின் அன்புபெறுதல் நெடுந்தூரமாம். ஆதலால் அடையத்தக்க பதவிநிலே கிடைக்காது. தற்பதநெறிபெறுதல் இயலாத காரியம்; அரிது (நூலறிவால் தற்பதநிலே விளங்கிக் கொள்ள முடியாவிடில் சீவன்முத்தன் (நிசயோகியின்) பேரன்பைப்

பெற தீவிர முயற்சி அவசியம்) பொய்யுலக தோற்றங்களில் மயங்கிய களங்கமுள்ள மனதுடையவனுக்கு அகமுகபரதவ நெறி நிலையின் பேரின்பம் மிகத்தூரத்திலுள்ளதாம். அருள் தோன்றாது (பேறறிவியலாது). பொய்த்தோற்றங்களில் மயங்கிய களங்கமுள்ள மனதுடையவனுக்கு பரவுகின்ற ஈனச்செயல்கள் நெடுந்தூரத்திலிருந்தும் சேர்ந்துவிடும். திரநிலை குன்றி நீங்கி அலைவுறுவன் மூடர்கள் சங்கம் எளிதே பெறலாம். சாதுசங்கம் பெறல் அரிது. (சாது சங்கம் பெற்றால்) நரகில் வீழப்போகிறவர்கள் விழுந்தவர்களும் திரும்பவும் சுவர்க்கம் பெறுவர் என்ப.

உலகத்திலுள்ள சகல சத்சங்கங்களையும் (சித்) தற்பத நெறிச்சங்கங்களாக்க முயல்வது உலக சேமம் உறுதிபெறும்.

(19) கொண்டபாவனை பிறவியாம்பூதங்கள்குலைந்துபோம்திசைதோன்ற
கண்டதேசங்கள் பிறசொலாத் திரிந்திடும் கனகிரி துகளாகும்
உண்டெனுந்தன்மை விழுங்கிட உலகுபோம் உப்பர்போம
புவனம்போம்
மண்டுவாரிபோம் உடுக்கள்போம் தானவர் வானவர் கணம் போகும்

(எ-து) தோற்றிமறையும் சகத்தில் தோன்றி மறையும் பொருட்களை சிந்தித்தல் (பிறவியாம்) பவபந்தமாம் அவ்வாறான பஞ்சபூதங்களின் ஏற்றத்தாழ்வான கூட்டுறவால் தூலசரீரம் பெற்றுள்ள சீவபரம்பரைகள் குலைந்துவிடும் (கூடியவாறே கலைந்துபோம்) திக்குகள் தோன்றாது பார்க்கப்பெற்ற தேசங்களின் பெயர்கள் மாறுபேருள்ளதாக மாறிவரும். கனமான மலைகள் தூசாகிவிடும். உண்டென்கிற தெய்வ உணர்வின் வியாபகத்தால் உலகம் இல்லாததாகிவிடும். அதேபோல விண்ணுடும் மறைந்துவிடும் (புவனம்) போரண்டங்களும் ஒழியும். நெருங்கிய சமுத்திரங்கள் வற்றும், நட்சத்திரங்கள் சிதறும்; அசுரர், தேவர் இருவருடைய தொகுதியும் நசிக்கும் என்ப.

(20) சித்தர் பொன்றுவர் துருவனுஞ்சிதைகுவன் சிவனயன்
திருமார்பன்
தத்துவந்தனி லொன்றுவர் காலமும் தருமமும் முடிவாகும்
மத்தவானும்போ மயக்கமே தருவதாய் வாக்கொடு செவிக் கெட்டாச்
சுத்தமாம் பொருளொன்றிஞ லிகழ்வுறத் தொல்லுலகிழிவாகும்

(எ-து) சித்தர் மரணமடைவர், துருவன் நசிவன். சிவன், அயன், திருமால் தற்பதத்தே கலந்துவிடுவர். யுகம், மகாயுகம், கல்பம் என்ற கணக்கே ஒழிந்துபோம். (உலகம் சூன்யமாம்) நியமன சக்தியும் முற்றுப்பெறும். பெரிய ஆகாயமும் இல்லையாகும். (ஆகாயமும்-(வெளி) இல்லையாகும்.) என்பதால் இதன் முற்றுப்பெற்ற

முடிவு சிந்தனைக்கு லயப்படாத சிந்தனையால் மயக்கம் தருவதை யிப்போதே பார்ப்பீர்கள் யோசித்துப்பாருங்கள். சொல்லுக்கும் கேள்விக்கும் எட்டாததும் புனித ஞானசொரூப தற்பத அணு ஒன்றே உள்ளதாம் இதனால் பழமையாக உள்ளதுபோல் உள்ள சகத்து ஒடுங்கிவிடும். (எ-ம்)

அடிமுடி வற்றுள்ள உணர்வே பரமபோதம்
செயப்படா உணர்வே தெய்வம்
உணர்விநுக்கு உணர்வ தாயினன்
அறிவை அறிவது பொருளென அருளிய-பெருமானே

(21) தெரிவுறு வயத்தில் வந்த புந்தியாற் சித்தந்தன்னை
பரிகரியாது விட்டாற் பரிகரிப்பது மற்றெந்நாள்
விரிவிடம் விடயமன்று விடயமே விடமாந் துன்பம்
புரிவிடம் கொல்வதோர் மெய் புலன் மறுபிறப்புங்கொல்லும்

(எ-து) அறிவின் (அறிவிப்பான்) நியதியில் ஏற்பட்ட புத்தியால் என் மனோ சந்தேகங்களை உடன் நிவர்த்தி செய்யாமல் விட்டால் நிவர்த்தி பெறுவது எந்தக்காலம்? (காலந்தான் நிச்சயமில்லையே. இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பாரென் றெண்ணவோ இட மில்லையே). ஆலகால விஷம் அவ்வளவு கொடியதல்ல! பொய்சகத் தோற்றமே பெரியவிஷமாகும். துன்பஞ்செய்கின்ற விடமானது ஒரு சரீரத்தை மாத்திரம் கெடுக்கும். மேற்கண்ட விஷய விட மானது இனிவருஞ்சன்ம தேகங்களையும் கெடுத்துக்கொண்டே வரும்.

(22) மாந்தர்தம் மிளமை நில்லா திவையெலா மனத்தினெண்ணிச்
சாந்திகொள் பெரியோர் நீவிர் சமாதியோகத்தைச் சார்ந்தீர்
ஆய்ந்தவென் சிந்தை சீவநாயகன் வசமாகைக்கே
ஏய்ந்தது நிலையுமெய்தா திறைவனைப் பிரிந்தாள்போல:

(23) ஆதலால் வருத்தங்குற்ற முபாதியோ டையமின்றி
மீதுறு மோகமின்றி விளங்கிய நிலைமையேது
காதல்செய் யின்பமிக்க விடயமாங் கனலில் வீழ்த்துந்
தீதரு நிலைமையேது தீயினுளிரதம் போல

(24) வசனமாந் தொழிலேயன்றி வருபவந்தான் வேறின்று
அசைதரு புனலையன்றி அளக்கர் வேறிலாததேபோல்
நசையறு பெரியோரெங்கன் நவையுறு துயரந்தீர்ந்தார்
இசையநீருணர்ந்த தந்த நிலையினை எனக்குச் சொல்வீர்.

(எ-து) (மனிதர்) தன் சரீர எவ்வனம் (முதலிய யாவும்) நிலையில்லா

தவையெனச் சிந்தித்தறிந்து உபசாந்தம் பெற்றுள்ள தாங்கள் நிச யோகத்தை யடைந்திருக்கிறீர்கள் இதையறிந்து யோசித்த என் மனம் சிவப்பிரம ஐக்கியத்தைப்பெறவே இசைந்துள்ளது.

நாயகனைப்பிரிந்த நாயகிபோல மனம் நிலைகொள்ளாதுள்ளது. ஆதலால் துன்பமும் பிழையும் உபாதையும் சந்தேகமும் இல்லாமல் மேலிடும் மோகமற்று பிரகாசிக்கும் நிலையான பதம் யாது? இச்சிக்கும் விடயமாகிய அக்கினியில் விழுந்தாலும் (அக்கினியில் வைத்த இரசமணி போல) தீதடையாத நிலையான பதம் எது? அலையுள்ள சலத்தையன்றி கடல் வேறில்லாததுபோல வாக்கு வியாபாரமே யன்றி வராநின்ற சம்சாரமானது வேறின்றும் ஒழுக்கமுள்ள சத்துக்கள் எப்படிக் குற்றமுள்ள துன்பத்தை நீங்கினார்கள்! பொருத்தமாக நீங்கள் உணர்ந்த அந்த நிச்சயநிலையை அடியேனுக்கு சொல்வீர்களாக.

(சரியாய் அறிந்துள்ளார்களா? என்று பாடம் கேட்பது போலுள்ளது? ஏன்? நாம் தெரிந்துகொள்ள!)

(25) மைம்மல மாமோகத்தை மாய்த்திடும் புதுமைத்தான
செம்மல் வாசகங்கள் கேட்டுத்திருந்தவை யிருந்தோ ரெல்லாம்
இம்மொழி கேட்பபோல வெழப்புள குவமை மிக்கார்
விம்மல்சேர் சித்தர் சேனை விண்மிசைக் களித்தவன்றே

(26) நன்று நன்றென்றுஞ் சொல்லும் நன்மலர் மழையுங்கூடி
ஒன்றியோர் கடிகைப்பாதி யிழிந்தபின் ஊழிகாலம்
வன்றுயருழன்ற சிந்தை மயங்கிய யாங்களெல்லாம்
இன்றிராகவன்சொல் என்னும் இன்னமு தமையப் பெற்றோம்

(எ-து) களங்கமுள்ள மகாமோக சம்சாரத்தைக் கெடுக்கப்பட்ட அதிசயமான இராமன் வசனங்களை (கேள்வியை) கேட்டு திருத்தமான சபையிலிருந்த சகலரும் தாங்களே கேட்டுக்கொள்வதுபோல மயிர்க்குச்செழக்களிப்பின் மிகுந்தார்கள். ஆனந்தங்கொண்டு ஆகாயத்திலே இருக்கும் சித்தர் கணங்கள் மிக்க மகிழ்ச்சியடைந்து நல்லது நல்லது என்ற வசனமும் புஷ்பமாரியுஞ்சேர்ந்து அரை நாழிகைநேரம் சபையில் வந்து நிறைந்த பின்பு கற்பகாலம் முதல் வலிய துன்பத்தோடும் விண்ணிற்சஞ்சரித்து அலைந்து மயங்கிய நாங்களனைவரும் இன்றைய தினம் இராமன் வசனமென்ற இனிய அமுதம் கிடைக்கப்பெற்றோமென்று சித்தர்கள் சொன்னார்கள்.

(27) திருந்திய விவன் சொலாலே தெளிவுறு சிந்தை பெற்றேம்
பெருந்தகை முனிவர் சொல்லும் பொருளினிப்பெறுது மென்னப்
பொருந்திய விண்ணினின்று பூதலத்திழிதலோடும்
இருந்த பேரவையோ ரெல்லாம் எழுந்தெதிர் கொள்வதானர்.

(எ-து) திருத்தமான இவ்விராமன் வசனத்தினல் தெளியப்பெற்ற சிந்தையடைந்தோம். இதற்கு மேன்மையான முனிவர்கள் போதிக்கும் (விடையையும்) பொருளையும் அறிந்துகொள்வோமென்று தாங்களிருந்த ஆகாயத்திலிருந்து சித்தர்கணங்கள் பூமியிலிறங்கவும் மகாசபையிலிருந்தோர் அனைவரும் எழுந்திருந்து எதிர்கொள்வதானர்கள்.

(28) வந்துறு சித்தர்க்கெல்லாம் வசிட்டனுங்காதிசேயும்
முந்து பூசனைகள் செய்தார் முனிவருக்கவருஞ் செய்தார்
அந்த நல்லவையின் வேந்தும் அருச்சனையவர்க்குச் செய்தான்
நந்து மன்னவர்க்கு மன்னர் நன்சொலாற் பூசை செய்தார்.

(எ-து) வந்தடைந்த சித்தர்கள் அனைவருக்கும் வசிட்டரும் விசுவாமித்திரரும் முந்தி ஆராதனை செய்தார்கள். பின்பு இந்த முனிவர்களுக்கு அச்சித்தர்களும் ஆராதனை செய்தனர். அந்த சபையிலுள்ள அரசனான தசரதனும் அச்சித்தர்களுக்குப் பூசை செய்தான். ஆக்கமுள்ள அவ்வரசனுக்கும் அச்சித்தர்கணங்கள் முகமன் வசனத்தினல் ஆராதித்தார்கள்.

இராமனுரைத்த அனுபவமே நிச்சயமெனல்

(29) ஈதவருரைத்தபின்னர் இராமனை இனிது நோக்கிக்
காதிசேயுரைப்பான் நீயே களங்கமில் புந்தியாலே
தீதற அனைத்துங்கண்டாய் தெளிவுறப் பிறிதொன்றில்லை
போதமார் சுகனும் நீயும் புந்தியாலொப்பீரன்றே

(எ-து) இவ்வாறு சித்தர்கணங்கள் கூறிய பின்பு இராமனை அன்பாகப் பார்த்து விசுவாமித்திரர் சொல்லுவார். நீ சுயமாகவே குற்றமற்ற அறிவினல் குற்றமற யாவையும் அறிந்தாய். இனித்தெளிவாய் அறியவேண்டிய பொருள் வேறில்லை ஞான நிறைந்த சுகரும் அறிவினல் நீயும் சமானமாவீர்கள் என்றார்.

இராமனுக்கு வசிட்டர் உபதேசம் செய்த தற்பத (ஞான) நெறியை இலட்சம் கிரந்தமாக வான்மீகர் பரத்துவாச முனிவருக்கு உபதேசம் செய்தார். இதில் ஆறுயிரம் கிரந்தத்தை மாத்திரம் ஆளவந்தார் என்பவர் 2055 தமிழ்ப்பாக்களால் ஆக்கி உலகிற்கு

உதவினர். அவை முற்றும் கற்றுத் தெளிவாயறிந்து இராமன் உணர்விநிலையை நன்குணர்வீர்கள்.

இராமன் கேட்கிற கேள்விகள் இராமன் அவதார அபூர்வ மகிமையை விளக்குவதாகும். அவ்வளவையும் ஈண்டு சுருங்கச் சொல்லி விளங்கவைக்கப் பெற்றுள்ளது. குழந்தை பிறந்த அன்றே அதை ஊமையர் தேசத்தில் கொண்டுபோய்விட்டு வளர்க்கும்படி செய்தால் அது பேசுமா? பிரசவ உதவிக்கு (மருத்துவத்திற்கு) ஓர் கன்னிகையை அனுப்பலாமா? கணக்கு உபாத்தியாயரால் மருத்துவம் கற்கும் மாணவனுக்கு போதிக்க இயலுமா? அது போல அற்ப விஷயங்களுக்கே அந்தந்த ஆசிரியர் தேவை என்பது முறையாகும்போது கடவுள் என்ற கேள்வி கேட்க! கடவுள் என்ற கேள்விக்கு விடைகூற தற்பத நிலையில் ஒன்றிய ஜீவன் முத்தனே தகுதியானவன்.

திருக்குறள் ஆசிரியர் வள்ளுவர்; இராமாயண ஆசிரியர் கம்பன். இவ்விருவரும் புனைந்துள்ள கவிகள்மூலம் இவர்களை தற்பத ஞானிகளென்றே நிச்சயமாய்க்கூறலாம் குறட்பாக்களை மாற்ற முடியாமல் தற்பதஞானப்பாக்களுக்கு உண்மையுரை யாருக்கும் புலப்படவில்லை. கம்பராமாயணம் அபூர்வஞானக்கவிகள் என்ப. எழுத்தாசிரியர்கள், பதிப்பாசிரியர்கள் இவர்களால் தங்கடங்கள் மதத்திற்கியைபப் பாடபேதங்கள் செய்துள்ளது வருந்தத்தக்கது. மனச்சாட்சியின் கொடுமை வருமுன் காத்துக்கொள்வீர்களாக!

தற்பத நெறிக்குத்தகாத மாணவன்

ஞானவாசிட்டம்-தேவபூசை கதை. சங்கரன் வசிட்டருக்கு உபதேசம் செய்தது.

(30) சகப்பேர் பெறுமிவ்வாதனைதான் தவிரிலழியாச் சாந்தியதாம்
அகப்பாவனையி லிச்சகத்தில் அலகைத்தேராம் நீர்தன்னில்
உகப்பா மறுதியுள்ளோர்கள் உபதேசிக்கவொண்ணுதோர்
மிகப்பாவிகளாஞ் சீ சீயென் றிகழ்வாரவரை மெய்யுணர்ந்தோர்

(எ-து) உலகநாமத்தைப் பெற்றிருக்கின்ற இந்த வாதனையானது கெடுமாயின் மனோ அமைதியாம். அகம்பாவத்திலும் இவ்வுலகத்திலும் கானற்சலத்திலும் நிச்சயபுத்தியுடையவர்கள் உபதேசம் பெறத் தகாதவர்கள். உண்மையறிந்த மகத்துக்கள் மேற்கண்டவர்களை தீயர் என சீ சீ யென்று விலகி நடப்பார்கள் (எ-ம்)

மனவலிமை யறிந்து அதை நீக்குதல்

(31) மனவன்பேய் உறப்பிடித்தால் சாத்திரத்தால் சுற்றத்தால் மாற்றவொண்ணு
வினவுறு தேசிகராலு மீட்பரிதாம் அந்தப் பேய்விட்டுநீங்கிச்
சினமின்றி யிருக்குமெனில் முன்னுரைத்த வகைகளாற்றீர்க்க லாகும்
கனபங்க மிலதாகிற் சிறுகுழியில் விலங்குதனைக் கரையுய்ப்பார் போல்

(எ-து) மனமென்கிற கொடிய பசாசம் உறுதியாகப்பற்றிக்கொண்டால் நூல்களினுலும் உறவினராலும் நீக்கமுடியாது. உபதேச ஆசிரியராலும் திருப்புதற்கரியதாம். அப்பாசம் விட்டுப்பிரிந்து துவேடமில்லாமல் நிற்குமாயின் முன்சொல்லப்பெற்ற ஆசாரியர் முதலிய பிரிவுகளினுல் (மிகுந்த சேறில்லாவிடில் சிறிய பள்ளத்தில் வீழ்ந்திருக்கின்ற மிருகத்தை கரையிலேற்றுவிப்பவர்களைப்போல) ஆசாபாசங்களினின்று விடுவித்து ஜீவபிரமைக்கிய ஞானத்தை உபதேசிக்கலாம்

மனப்பேய் பிடித்துள்ள உறுதியான செயல்:—சதா காம சிந்தனை, விபசாரமே தொழிலாதல்; சிடுமூஞ்சித்தனம்; அமைதியின்மை; பேராசை, வஞ்சனை; துவேசம்; கடவுள்பற்றிய விபரீத வினுக்கள், அருளைப்பொருள்களான தருப்பை, விபூதி ருத்திராட்சம் போன்றவைகளை தூசித்தல்; ஆபாசமெனக்கூறுதல்; பொய், களவு விபரீத கூட்டத்தில் கூடுதல்; பெரியாரை மதியாமை; பொய் வேடம்; பொய் கூறுதல்; ஏமாற்று வித்தைகள் செய்தல் இத்யாதி விபரீத கர்மங்களாகும்

(32) நல்லறிவு நற்புருடர் குணம் நன்னூல் மேவிய நல்வருத்தத்தாலே
புல்லில் பொருள் ஓரிடத்தும் கிடையாது மனமென்னும் பொல்லா வன்பேய்
அல்லல்தரும் பயஞ்செய்யுந் தீரதையாம் பெருஞ்செல்வ மனைத்துமாய்க்கும்
கொல்லுமிது தனை நீக்கியேதாரு யஃதாகிக் குறைவு தீர்வாய்

(எ-து) நல்ல ஞானத்தையும் நல்ல சத்துக்கள் (சத்வகுணமுடையார்கள்) குணத்தையும் நல்ல ஆத்மஞான சாஸ்திரங்களையும் பொருந்திய நல்ல பிரயத்தினுல் பொருந்தாத வஸ்துக்கள் எவ்விடத்திலுமேயில்லை. மனமென்கிறவலிய பசாசம் துன்பத்தையே கொடுக்கும். அச்சம் தரும். தீரமாகிய மாட்சிமை பெற்ற

செல்வங்கள் யாவையும் கெடுக்கும். கொலை செய்யவிருக்கும் இந்த மனத்தைக்கெடுத்து எதுவானுயோ அதுவேயாய் பூரண நிலையை அடைவாய். (எ-ம்)

தற்பத நிலை

(33) உரைகளுக்கெட்டா துளத்தனுபவிக்கிலுறுவதாம் உரைத்த வத்துரியம்
கரையறு மிவைகள் முழுதுமப்பொருளாம் கனபரிணுமியாம் உள்ளம்
வரைவற வொடுங்கில் உட்புறமெங்கு மன்னிய சராசர வடிவாம்.
புரையறு தேவதேவனும் பரம் அப்பொருள் அனுபவப்படுந்தானே

(எ-து) தற்பத சுத்த நிலை. வசனங்களுக்கு அகப்படாதது. அகமுக மாக நுண்மாணுழை புலனால் நோக்கப் பொருந்துவதாகும். புறத் தோற்றத்திலுள்ள வரம்பற்ற யாவும் ஆத்மசொரூபமேயாகும். மிக்க வேறுபாடுடைய மனமானது புறவிடயங்களிற் செல்லாமல் அறிவின் வயத்து உள்நோக்கில் தற்பதமே சகத்வடிவமாம் பூரண வியாபக தேவதேவனும். அனுபவத்திற்குரிய மெய்ப்பொருள் (பரப்பிரமம்)

(34) "அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

(அ-ம்) ஆதிபகவன் முதற்றே உலகு எல்லாம் எழுத்து
அக-ரம்—முதல்

பகவன்—ஒருமையில் பன்மை. பக வன்—ஒன்று மூன்ருகிய பாக நிலை பகவன்—ஒருமை. பக வன்—பொருள்கொண்டு பன்மையாம். பகவன்—ஈசன், மாயோன்—பிரமா. பொதுப்பெயர். (சகத்தொழி லின் நிமித்தம் தற்பதமொன்றே முப்பகுதியாய் முப்பரம்பொருளாய் செயற்படுவதால் பகவன் என்ற நாமம் பன்மையாம்.
(க-ரை) முதல் மூலத்திறைவர் மூவரை முன்னிட்டுள்ள சகத் யாவும் சித்திரம் (கண்ணுடி பிரதிபிம்பம் போன்றது—திரைப்படம் போன்றது.) இதற்கு அகத்துள் உள்ள தாரகபிரமமே மூலப் பொருள் ரம்—ரமித்தல் இன்புறல் பேரின்ப நிலை (தற்பதம்)

(40) பகுதியினுட்பயன் பயந்த தன்னதின்
மிகுதியின் மிகுதிகளெவையும் மேலவர்
வகுதியின் வசத்தன வரவுபோக்கது
புகுதியில்லாதவர் புலத்திற்ருகுமோ (கம்பர்-பிரகலாதன்)

(எ-து) தற்பத சகத்சோதி ஒன்றே. சிருட்டி, திதி, சங்கார நிமித்தம் பகிர்ந்த முப்பரம்பொருட்கள் (அயன் அரி அரன்) சிந்தனை அருள் வெளியே அண்டம். இந்த ஒவ்வொரு அண்டத்துள்ளும் தற்பத ஜீவன் முத்தர்களின் எண்ணியாங்கு ஏற்பட்ட அண்டங்களின் மிகுதி கணக்கில் தெளிந்த வல்லான் வகுத்த எண்ணமே நிலையான நிலையமாகும். இவ்வாறு மலர்ந்து விரிந்து செல்லும் கணக்கற்ற அண்டங்களின் தோற்றமும் மறைவும் செயலும் (நெறிமுறை தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களா?) இந்நிலை நுண்மா நுழைபுலனில்லாதவரால் அறியத்தக்கதல்ல.

உதாரணம்:— இந்த பூமி, சந்திரன் முதலிய நட்சத்திர மண்டலங்கள் பல்லாயிரக்கோடி அண்டமும் தன் தன் சுற்றோட்டப் பாதையில் சுழன்றுகொண்டுள்ளன. தாங்கும் ஆதரவு.................... தற்பதம் (தாரகபிரமம்) நிசயோகியின் எண்ணமே நிலைக்கும் நிலையம்.

தற்பதநெறி

(41) கூடுசெயும் தன் வாயின் நூலாற் பொன்றுங்
கோசகாரக் கிருமிக் கூட்டம்போல
ஓடுபொறியெனுஞ் சிசுக்காள் மயலால் வீணே
யுலர்ந்திடுவீர் பொறிக்கெல்லா முறையுளான

நீடுமனனே யொடுங்கிப் பொறிகளோடு
நீ வேறற் ருத்தும தத்துவத்தை நேரே
நாடுதி பற்றற்றொன்றாய் முத்தியான
ஞானவடிவினை நிலையாய் நண்ணுவாயே

(எ-து) கூடு செய்கின்ற தன் வாய் நூலினால் மரணமடையும் பட்டுப்புழுபோல இந்திரியங்களைத்திற்கும் உயிர்தருவனவாகி புறத் தோற்றங்களில் தாவி மயங்கி வீணாகக் கெடும் மனமே! அறிவின் முன்னோடாமல் அடங்கி ஐம்பொறிகளுடன் தொடர்புற்று மாறுபடாமல் ஆத்மஞானத்தை நேர்மையாக நோக்குவாய். பற்றற்ற ஏக தற்பதத்தே கலந்து ஞான சொரூபத்தை நிலையாகப்பொருந்துவாய் என்ப.

(42) பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

(அ-ம்) பற்று அற்றான் பற்றினை பற்றுக
அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு

பற்று அற்றான்—பாச பந்தமற்ற தற்பதம். (உணர்வே தெய்வம்)
பற்றினை பற்றுக—சிந்தனை சப்த வழியை
பற்றுக—பற்றி நாடுக (அகமுகமாக)
அப்பற்றைப்பற்றுக—ஆதார தாரக (தற்பதத்தை) கலந்து நிற்க (கவித்தல்)
பற்றுவிடற்கு—பாசபந்த விடுதலைபெற (பெறலாம்)
(க-ரை) சப்தம் வருகிற வழியைப்பற்றி அகமுகமாக நாடிச்சென்று தற்பதத்தே கலந்தால் பாசபந்தம் விலகிவிடும் என்ப

(43) பற்றிலதாய் நின்மலமாய் மனம் விவகாரம் பயின்றும் பந்தம்மேவா
பற்றுள நெஞ்சு அளவில் தவம் படைத்தாலும் பந்தமே பயிலும் உள்ளில்
பற்றிலதாய் இனிய தொழில் பயில் சீவன் புறத்தொழில்கள் பண்ணினாலும்
பற்றறப் பண்ணுவிடினும் பண்ணுவோன் புசிப்போனும் பான்மைமேவா

(எ-து) பற்றற்ற மாசு படியாத மனது தொழில்களைச் செய்தாலும் பந்தமடையாது. பற்றுற்ற மனது அதிக தவம் செய்தாலும் பந்தத்தையே அடையும். அகப்பற்றற்று ஏற்படும் செயல் செய்கின்ற சீவனுனது புறத்தொழில்கள் செய்தாலும் செய்யாவிடினும் செய்பவனும் புசிப்பவனும் பெறும் இருவினைப் பகுதியிற் பொருந்தாது, (எ-ம்)

(44) இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

(1) நல்வினை (2) தீவினை (3) கடவுளைச்சார்ந்த பற்றற்ற (புகழ்) வினை, நல்வினை தீவினை இந்த இரண்டும் பிறவித்துன்பம் தருவன. கடவுளைச் சார்ந்த புகழ்வினை - பிறப்பற்ற விதேக கைவல்ய முத்தி தருவன.
(க-ரை) பற்றற்ற புகழ்வினை செய்பவன் இருவினையாலேற்படும் பிறவித்துன்பத்தையடையான் (எ-ம்)

வரம் பெறல்

1. எண்ணிய எண்ணியாங் கெய்துப —குறள்
2. யாது எவன் நினைந்தான் அன்னபயத்தன — கம்பர்
3. அங்கு இங்கு எனுதபடி எங்கும் வியாபகமான உணர்வே தெய்வம்
4. மல்வழியாம் கற்பங்களனைத்தினுமாயாததனு லதுவே தெய்வம்.

5. எங்குமுறைவோன் எவராலும் எய்தப்படுவோன் இவன் கருதும்கருத்திலுள்ள கருத்தன்.

உதாரணம் 1

பொய்யமுகுலத்துப் புலத்தியன் வழியிலுதித்த இராவணன் குபேரனிடத்திருந்த இலங்கையைக் கைப்பற்றத் தவஞ் செய்கிறான். தன்னையறிந்த சிவயோக நிலையில் சமாதி (புறச்செயலில் கருத்து) எண்ணியபடி கருத்தன் (பிரமம்) தோன்றுகிறார். கருத்தில் இருந்து தோன்றிய கருத்தன் தோற்றம் (எண்ணிய உருவத்தில் தோன்றியுள்ளதால்) கேட்டவரம் யாவும் கொடுத்துவிட உரியதே. கொடுத்துவிடும் கேட்கும் வரம் நேர்மையுடன் பாசபந்தமற்றதாக இருக்குமானால் அழிவே இல்லை. பாசபந்தமுற்றதானால்! அக்கருத்தனே பாசபந்த எதிர்ப்புத் தோற்றமாக அவதரித்து இவனையும் தந்த வரத்தையும் அழித்து நேர்மையை நிலைநாட்டுகிறான். இந்த இரகசியத்தைச் சிந்திக்காத பாசபந்தச் செயலில் உலகத்தை இம்சிக்கும் போது அந்தத் தாரக பிரமமே தோன்றுவதுதான் அறக் கடவுள்.

உதாரணம் 2

வாலி பெற்றுக்கொண்ட வரம்

பேதையர் எதிர்க்குவரெனினும் பெற்றுடை
ஊதிய வரங்களும் உரமும் உள்ளதில்
பாதியும் என்னதாம். என்றவரம்.

எண்ணிய எண்ணியாங்கு தோன்றிய பரமன் (கருத்தன்) வரங்கொடுத்தான். இவை பாசபந்தமுற்றதென்பதால் இவன் வரத்திற்கு மாறாக எதிர்நின்றும் தோற்றாத உலக உயிருக்கு மூலப் பொருளான தருமதேவதையே அவதரித்து அழிக்கின்றன.

அவனே கூறுகிறான்

அருமையினின் றுயிரளிக்கும் ஆறுடைத்
தருமமே தவிர்க்குமோ தன்னைத்தானரோ.

உதாரணம் 3.

பற்றற்றவன் தவம்:— கருதும் கருத்தனில் கலந்து நிசயோகம் பெற்றநிலை. இரண்டறக் கலந்துவிடுகிறான். இவன் எண்ணினால் எந்தரூப ஜோதிக் கடவுளும் காட்சிக்குவரும். இவனுக்கு எதுவும் தேவையில்லை; பெறவேண்டியதுமில்லை. பாசபந்தமற்ற பற்றற்ற

நிலையில் ஒன்றும் தேவையில்லை. வேண்டுமானால் நின் அன்பு விலகாது அழியாத சரீரத்துடன் என்றும் இன்றுபோலிருக்க வேண்டுமென்று கேட்கலாம் இரண்டறக் கலந்த நிலையில் இதுவும் அவசியமில்லை. இதைத்தான்—இந்த நிலையைத்தான் பரமன் (சங்கரன்) வசிட்டரிடம் கூறினார் (இவ்வாறு)

(45) சொன்ன நெறியிலறிஞர் தினந்தோறுந் தேவார்ச்சனை புரியில்
என்னை முதலோர் தொண்டர்களால் ஏற்றமிக்க பதம் அடைவர்
(ஞா-வா.)

சிவன்முதலான அடியார்களால் தோத்திரம் செய்யும்படி மேலாயிருக்கின்ற பிரமபதமே நிசயோகம், சமாதி. இவர்

' புதுமையாய் ஒன்றும் பாரார்
நன்று தீதெண்ணார் சாட்சி நடுவான சீவன்முத்தர்''

இராமன் திருமணச்செய்தி கேள்வியுற்ற நகரமக்கள் குடும்பசகிதம் அவரவர் வாகனங்களில் புறப்பட்டுச் செல்கின்றனர். சந்திரசயிலமென்ற மலையில் உலாவிக்கொண்டுள்ளார்கள் ஓர் குதிரை எழுந்து புழுதியை விரைந்து உதறிவிட்டு சுகமாக நின்றது. யோசிக்கிறது. சுகமாக இருக்கவேண்டிய நான் கனமான சுமையுடன் வந்திருக்கிறேன். இன்னும் அதிக தூரம் சுமையுடன் செல்லவேண்டியுள்ளது. நம்மைக்கட்டியுள்ள முப்புரிக்கயிறோ நம் முழுபலங்கொண்டிழுத்தாலும் அறுது செய்கையின் சூழ்ச்சியால் குறுக்காக முறுக்கி இழுத்தால் அற்றுப்போம், என சிந்தித்தபடி முறுக்கி இழுத்து அற்றுவிடுவித்துக்கொண்டு சுமையில்லையென்ற பெருமிதத்துடன் தன்னிடத்திற்கே திருப்பிச் சென்றனவாம். மிதிலைக்குச்செல்லவில்லை.

ஞானிகளின் உவமானக்கவிகள் (கம்பர்)

(46) தீயவரோ டொன்றிய திரத்தரு நலத்தோர்
ஆயவரை யந்நிலை யறிந்தனர் துறந்தாங்
கேயவரு நுண்பொடி படிந்துடனெழுந்தொண்
பாய்பரி விரைந்துதறி நின்றன பரந்தே

திரம்-பதவி (சமாதி) அரு—அறிவு (கடவுள்)

ஞானப் பொருள்

தீவினையாளருடன் ஒருமித்துற்று அன்னவர்களின் கர்மவினைப் பயனை யோர்ந்தறிந்த தற்பத ஞானியானவன் அவர்களினின்று நீங்கி

பேரின்பப் பேருணர்வினால் தன்மேல் படிந்துள்ள வினைமாசு முதலிய பற்றுக்களினின்று துரிதமாக விலகிக்கொண்டனர் என்ப.

(47) மும்மைபுரி வன்கயறு கொய்து செயல்மொய்ம்பால்
தம்மையு முணர்ந்து தரைகண்டு விரைகின்ற
அம்மையினோ டிம்மையை யறிந்து நெறிசெல்லும்
செம்மையவரென்ன நனிசென்றது துரங்கம்.

மும்மைபுரி வன்கயறு—மண், பெண், பொன் என்று விடுவிக்கமுடியாத பாசக் (கயிறு)

தம்மையுமுணர்ந்து—தன்னையறியும் பேரறிவு (சமாதிநிலை) தன்னைத் தானுணரத்தீரும் தகையறு பிறவியென்ப கிட்கிந்தாகாண்டம்

தரைகண்டு—நிலையறிந்து (நன்னிலம்)
இம்மை-இப்பிறப்பின் வினைப்பயன் துன்பம்.
அம்மை—தற்பத சக்தியின் நிலை (நிசயோகம்) மூலப்பொருள்
செயல் மொய்ப்பால் (சாதாரணமாக விடுவிக்கமுடியாத பாசக்கயிறு இதை வைராக்கிய பலத்தின்மூலம் அல்லது இரசமணி அணிந்த சிந்தனுபலத்தின்மூலம்) செய்கையின் முயற்சியால்.

நெறிசெல்லும்—தற்பத நெறியில் அகமுகமாகச் செல்லுதல்
நனி சென்றது—பெருமிதத்துடன் சென்றது

குறிப்பு:— புறத்தோற்றம் விட்டு அகமுகமாகச் செல்லுதல், மிதிலை போவதை விட்டுக் குதிரை திரும்பி ஓடுதல்-உவமை

(பொ-ரை) இகத்தே ஏற்படும் வினைத்துன்பத்தையும் பரத்தே (தற்பதத்தே) யுள்ள பேரின்பநிலையையும் அறிந்து ஒவ்வொருவரையும் கட்டப்பெற்றுள்ள மண், பெண், பொன் என்ற பாசக் கயிற்றை நன்னெறியென்ற யுக்தி வழிகளைக்கொண்டு (பாசத்தை) அறுத்து அகமுகமாக நாடி தன்னையறிதல் என்ற சிற்பத நிலை பெறப்பேரின்ப நெறியில் சென்றது என்ப

தற்பத மகத்துவம்

(48) நிலையிற்றிரியா தடங்கியான் றோற்றம்
மலையினும் மாணப் பெரிது

(க-ரை) தற்பதநிலையில் விகற்பமற்றுக் கலந்த சிவயோகநிலை மலையைக்காட்டினும் மிகவும் கனமுடையது. (எ-ப)

மனம் ஒடுங்கி மறையுமிடம்

புறநோக்கச் செயற்பாடுகளால் ஏற்படும் இன்னல்களை ஒருங்கே யுணர்ந்து சத்தம் வருகிறவழியே அகமுகமாக நோகக வேண்டும். நான் யார்? என்று அகமுகமாக நோக்கினாலும் சரி ஒவ்வொரு சீவனும் சத்தமிடுகிறது ஒவ்வொருவனும் சத்தமிடு கிறான். நமக்கும், பிணத்திற்குமுள்ள வித்தியாச மென்னவென்றால், நாம் சத்தமிடுவோம் பிணம் சத்தமிடாது. சத்தமிடும் ஆசான் வெளியேறிவிட்டதால் அவன் பிணம் ஆகிவிட் டான். நாம் சத்தமிட்டுக்கொண்டேயிருக்கிறோம் சத்தமிடுபவன் யார்? சத்தமிடுபவனுக்கும் நமக்கும் உள்ள தூரம் என்ன? உள் நோக்கத்தே அகமுகமாக சத்தம் வருகிற வழியே செல்ல சத்த மிடுபவன் (கருதுபவன்) கருத்தன் அதுவில் கலப்பதே தற்பதநிலே சமாதி. (விபரம் நேரில்) மனம், மாயை மறைந்துவிடும். சகத் அணுவடிவம் சகத் தற்பதத்தே ஒடுங்கி உறைவது-செயற்படுவது மாயாவிசாலம் விளங்கும். இதுவே கடவுள் என்ற வினாவிற்கு விடையாம்.

இராவணன் தவபலத்தால் பிரமத்தினிடத்தில் வேலாயுத மும் சிவபெருமானிடத்தில் சூலாயுதமும் பெற்று சகல லோகத்தை யும் அடக்கி ஆண்டுவந்தான் மல்யுத்தத்தில் எதிர்த்தவன் பலத் தில் பாதிபெற்று வெற்றிகொண்ட வாலியும் மேற்கண்ட செய்தி அறிந்த பின்பே நட்பாகிவிடுகிறான். இராவணன் வில்யுத்தம் செய் வது என்று ஏற்பட்டால் வாலிபோன்ற எவரும் வெல்வது முடியாத காரியம். இத்தகைய வேலும் சூலமும் உள்ள அகந்தையே இவன் அடங்காத செயல். முதல்நாள் யுத்தத்தில் இலக்குமணனுடைய பலத்தைச்சோதிக்கிறான்- எந்த பாணமும் இலக்குமணனை அணுக முடியாது என்று அறிந்த இராவணன் பிரமா தந்த வேலாயுதத்தை விட்டுக்கொனறுவிடலாம் என்று எண்ணியபடி வேல் ஏவுகிறான். இதன் மகாவேகம் வலியை யுணர்ந்த இலக்குமணன் விபீடணனை வினவுகிறான். ஐயா! ஈது உன் உயிர் அழிக்கும் என்றே கூறினான். வேலாயுதத்தைத் தடுக்கமுடியாதென்றறிந்த இலக்குமணன் (தறபத) நிலையிற்றிரியா தடங்கினன். வேல் மார்பில்படவே வேலின் பல மொழிந்தது; மயங்கி விழுகிறான். (இராவணன் பார்த்தான்) "அஞ்சினனலன், அயன் தந்த வேலினும் ஆவிதுஞ்சினனலன்" சோர்வுற்றான என்றறிந்து சோர்வு நீங்குமுன் தூக்கிக்கொண்டு போய்விடலாம் என்று எண்ணினான். எண்ணியவன் யார்? இவன் பலம் என்ன? 'தொடுத்த எண்வகை மூர்த்தியை (சிவபெருமானை)

துளக்கி வெண்பொருப்போடு (வெளளியங்கிரி மலையுடன்) எடுத்த தோள்களையுடையவன் இராவணன் இலக்குமணனைத் தூக்குகிறான். வெள்ளியங்கிரிமலையைச் சிவபெருமானோடு எடுத்த தோள்களுக்கு இலக்குமணனை எடுக்கவும் தூக்கவும் முடியவில்லை என்பதே. ''நிலையிற்றிரியா தடங்கியான்றோற்றம் மலையினும் மாணப்பெரிது''

சூலாயுதத்தை இராமன்மேல்விடுகிறான். இராமன், சூலம் வருகிற நிலையும் செயலும் மகிமையும் அறிந்து தன் தற்பத நிலை உங் என்று அக்கினி சொரூபத்தை உந்திய கணமே (க்ஷணம்) சிவன் சூலம் மறைந்துவிடுகிறது

அ — ந	:	பிரிதிவு	— மண்		அகாரம்	அடி
இ — ம	:	அப்பு	— நீர்		இகாரம்	இடை
உ — சி	:	தேயு	— அக்கினி		உகாரம்	உந்தி
எ — வ	:	வாயு	— காற்று		எகாரம்	கண்டம்
ஒ — ய	:	ஆகாயம்	— வெளி		ஓங்காரம்	மூளை

உற்பவ ஆதாரம் (தாரகம்) தற்பதம்

(சமாதி) நிசயோகத்தே உயிர் அடங்கியுள்ள இடம் குண்டலி

சக்தி. தூலதேகத்தின் நிலையைக் காப்பது.

..................தியானத்தாற்பூசிக்க யிலக்கம்பானு
தினைத்தாகு மெனவொளிகட் கொளியாமுட் சிற்சுடர் நானென்று
சேர்க'' (ஞா. வா.)

இலட்சம் சூரியன் ஒளி ஒன்றாகூடினால் தற்பர ஒளியின்முன் ஓர் தினையளவு என்பதாம் இந்த நிலையில் எதிர்ப்பட்ட சிவன்சூலம் மறைந்துவிடுவது ஆச்சரியமில்லை. வரபலங்கள் யாவும் இராமன் முன் நில்லாது என்று உணர்ந்துகொள்கிறான்.

மன்மதன்

மன்மதன் உலகம்தோன்றிய காலம்முதல் தோல்வியையே அறியாதவன். 'உருவமில்லாப்பிரமம் ஒன்றேயன்றி உருவமுள்ளார் எத்தேவராயினும் இவன் புட்ப பாணத்திற்குத் தப்பமுடியாது. சிவபரஞ்சுடரிடமும் எண்ணியாங்கு வெற்றிகண்டவன். இராமனை யும் வெல்வோம் என்ற கருத்துடன் எந்த தேவாதிதேவர் போட்டி யிலும் அழிவில்லாதது. சகத் செயற்படும் சிற்றின்ப அருள்நோக் கத்திலமைந்தது. அழகே வடிவானதுமான கரும்புவில் புட்பபாணம்

தரித்துக்கொண்டான். உதவிக்கும் இலக்குமணன் இல்லாதசமயம். இடம்-கானகம், நேரம்-நடுநிசி, இருப்பு-பாழ்மண்டபம். இராமனை வெற்றிபெற நல்ல சந்தர்ப்பம். கரும்பு வில்லையும் பஞ்ச புட்பங் களையும் கையில் எடுத்துக்கொண்டான். நாண்பூட்டினான். தாரக ராமன்மேல் பாணம் விடலாம் என எண்ணினான் அவ்வளவுதான். இராமன் தோற்றப்படவில்லை. பஞ்சபாணங்களும் மகாமந்திரமும் மறைந்துவிட்டன. சிந்தனைக்கே வரவில்லை. அறிவற்றவனாய் தடு மாற்றமடைகிறான். இதோ

கம்பர் கவி

(49) தேனின் தெய்வத் திரு நெடுநாட்சிலைப்
பூனின் றெய்யும் பொருகணை வீரனும்
மேனின் றெய்ய விமலனை நோக்கினான்
தானுந் தேர்கிலனாய்த் தடுமாறுவான்

அகத்தியர்

"வேதம் வேதியர் விரிஞ்சன் முதலோர் தெரிகிலா ஆதி நாதன், தாரக பிரமம். இதை அறியும் தற்பத நெறி-தமிழ் நெறியே அழகிய அக்கினியுமிழும் நெற்றிக் கண்ணையுடைய சகச்சோதி சொரூபப்பொருளான ஒளிதரு சூலபாணி ஓர் காலத்தில் தற்பத நிலையுட் சாரச் செய்யும் தனிவழி கூறியுள்ள மொழி எது? வென. சகல பாஷைகளையும் சமநோக்குடன் முறையுடன் ஆராய்ந்து கண் டறிந்து கூறியது தமிழ் மொழி. அதை அவரிடமே கற்று அறிவித் தவர் தமிழ்முனி அகத்தியர்.

கம்பர் கவி

(50) உழக்குமறை நாலினுமுயர்ந்துலக மோதும்
வழக்கினும் மதிக்கவினினும் மரபினாடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கண்
தழற்புரை சுடற்கடவுள் தந்த தமிழ் தந்தான்

நெறிமுறை தவறாத நிகழ்வுபெற்ற சொற்செட்டுடையது தமிழ் மொழியே! உயிரெழுத்துக்கள் அ இ உ எ ஒ ஐந்தும் பஞ்சபூதங்கள் எழுத்துவடிவுடன் சப்தவடிவோடு பூத இயல்பும் உடையன. எந்த பாஷை கற்ற எவன் வாயிலிருந்து எந்த சப்தம் வெளிவரினும் எந்த சீவனின் சப்தமும் இந்த ஐந்து எழுத்தின் ஓசை முடிவையே பெற்று வருதலால் இந்த எழுத்துக்கள் ஐந்தும் உயிரெழுத்துக்களாக அமைந்துள்ளது தமிழ்தான்.

உதாரணச் சொற்கள்—க்யூ   யூஉ   உகாரம் பிறப்பன
இசற்   ற்உ   உகாரம் பிறப்பன
யி   யிஇ   இகாரம் பிறப்பன
யு   யுஉ   உகாரம் பிறப்பன

சகல எழுத்துவடிவினும் பிறப்பன முடிவு இந்த ஐந்துதான். சொற்கள் யாவும் இந்த ஐந்து எழுத்தே கொண்டுவருவன எனவே உயிரெழுத்துக்கள் 5. குறில் 5, நெடில் 5, ஆக உயிர் 10+2

ஐ.   ஔ.   (அய்-அவ்) அகாரத்தை உடையன
எழுத்துவடிவம் சப்த வடிவமன்றி

பஞ்ச பூத வடிவ உதாரணம்

பஞ்சபூத ஏற்றத்தாழ்வின் கூட்டுறவிலாயது சகம். அதேபோல சரீரத்தோற்றமுமாம். அகில சரீரமும் பஞ்சபூதத்திலாயதென்ருலும்நட்சத்திரம்காரணமாய் ஒவ்வொரு சரீரமும் ஓர்பூதத்தியல்பை உடையன. இவ்வியக்கத்தைச் சிவன் ஏற்று நடாத்துகிறது.

அசுவதி பறணி கார்த்திகை ரோகணி மிருகசீரிடம்
பிரிதிவு   அ   புனைப்பெயர்   வல்லூறு
திருவாதிரை புனர்பூசம் பூசம் ஆயில்யம் மகம் பூரம்
அப்பு   இ   புனைப்பெயர்   ஆந்தை
உத்திரம் அத்தம் சித்திரை சோதி விசாகம்
தேயு   உ   புனைப்பெயர்   காகம்
அநுடம் கேட்டை மூலம் பூராடம் உத்திராடம் திருவோணம்
வாயு   எ   புனைப்பெயர்   கோழி
அவிட்டம் சதயம் பூரட்டாதி உத்திரட்டாதி ரேவதி
ஆகாயம்   ஒ   புனைப்பெயர்   மயில்

ஒவ்வொருவரும் பஞ்சபூதத்திலொன்றின் தன்மையர். இது சன்ம நட்சத்திரத்தால் அமைவது. அட்சர பஞ்சபூத நாமத்தை பட்சிகளின் புனைபெயரால் முருகனுல் அறிவிக்கப்பெற்றது பஞ்சபட்சிநூல் அங் இங் உங் எங் ஒங். இந்த உயிரட்சரங்களைக்கொண்டு ஒருவன் உயிர்நிலையைத் தீர்மானித்து இந்த அட்சரங்களை வாசியோகத்தால் பரகாயப் பிரவேசசகதியால் "ஒன்னுர்த்தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணில் தவத்தால் வரும்" என்பதற்கியைய 'பஞ்சபட்சி படித்தவனேடு பகையாதே' என்ற பழமொழியும் உண்டு. இந்த அட்சரங்களை ஆதரவாகக்கொண்டே அட்டகன்ம சித்தி மந்திர நூல்களாக்கப்பெற்றுள்ளன. எனவே தமிழ் உயிர் எழுத்துக்கள்

பஞ்சபூத இயல்பும் சிவ ஆதாரத்தான அமைப்பும் புவனதோற்ற இணைப்பும் பொருத்தமும் உள்ளதாக இயற்கை நியதியில் இணைந்துள்ளதால் புவன கர்த்தாவான சிவபரஞ்சுடரால் ஆக்கி அருளப் பெற்றதென்பதில் ஐயமில்லை. நமசிவய என்பது மந்திரமல்ல; திருநாமம். இதற்கு மூலமந்திரம் அகாரம் இகாரம் உகாரம் எகாரம் ஒங்காரமாகும். இதன் கலை 51 இதன் விரிவு குருமுகமாயறிந்து ஞானம் பெறல் நல்லது. இன்னும் இதன் தொடர்பு மிக மிகவிரியுமென்றஞ்சி விடுத்தேன்.

(51) சத்தம் பிறந்த தனிவழியே யுள்நோக்கி
ஒலுற்றுலொழியோ டுறலாம் பராபரமே (தமிழ்ச்சித்தர்)

இராமன் வனத்தில் அவ்வழியே வருவதையறிந்த தமிழ் முனிவர் எதிர்பார்த்த வண்ணமிருக்கின்றார். சிந்திக்கிறார். சில பக்தர்கள் கடவுள் விண்ணில் இருப்பதாக எண்ணி ஆகாயத்தைப் பார்த்து வணங்குகின்றார்கள் பூமியில் இருப்பதாகவும் வணக்கம் செலுத்துகிறார்கள் நாம உரு செபிக்கிறார்கள். மந்திரங்களில் இருப்பதாக வழிபாடுசெய்கிறார்கள் இத்யாதி செய்கைகளில் கடவுள் இருக்கிறார் வருவார் என்று கருதுகிறார்களே அந்தக் கருத்தில் இருக்கிறானே அந்தக் கருத்தன் — அவன்தான் தாரகபிரமம். தற்பரன் தற்பதம் பராபரன் அவன் இன்று தர்மபரிபாலனநிமித்தம் நேர்கண்காட்சி தர வருகிறான் என்றே எதிர்பார்த்தவண்ணமிருக்கிறார்.

(52) விண்ணினில் நிலத்தினில் விகற்ப வுலகிற்பேர்
எண்ணினில் இருக்கினில் இருக்குமென யாரும்
உண்ணிறை கருத்தினி லுறப் பெறுவனலென்
கண்ணினி லெனக்கொடு களிப்புறு மனத்தான்

சடாயு

பிராட்டியார் அவர்களை, சூட்சி வஞ்சனையால் திருடிக்கொண்டு ஓடும் இராவணனால், இன்னும் ஓர் கற்பகாலம்வரை ஆயுளுடனிருக்கத் தக்க சடாயு, சிவன் தந்த வாளால் வெட்டுண்டு குற்றுயிராகக் கிடக்கவே பிராட்டியைத் தேடிவரும் இராமனும் இலக்குமணனும் சடாயுவைக்காண்கிறார்கள். உணர்வொடுங்கியுள்ளதால் உபசாரம் செய்யத் தெளிவுற்ற சடாயு கண்விழித்துப்பார்க்கிறான் இராமபிரானுடைய பாதங்கள் கண்ணில் பார்த்தான்

"வேதங்கள் காண்கிலாமை வெளிநின்றே மறையும் வீரன்
பாதங்கள் கண்ணில் பார்த்தான்"

சிதங்கொள் மலருளோனும் தேவரும் மாத்திரமல்ல! வேதங்காண முடியாத மாணடி (தற்பதம்) இது இருப்பது வெட்டவெளியில் தான். வெளியில்மட்டுமல்ல, உள்ளிலுங்கூட மறைந்தல்ல, நேர் வழியே நிற்கின்றான். அஞ்ஞானக்குருடன் ஒருவன் காணவில்லை மறைந்திருக்கிறான் என்றால் அது குருடன் குற்றமே. ஞானக்கண் அகமுக நேர்பார்வையிலே உள்ள மெய்ப் பொருள். நேர்மைக்கு மாறுபட்டவருக்குத் தோற்றப்படாதவன் இங்ஙனம் அன்றும் இன்றும் இப்போதும் எப்போதும் உள்ளது உள்ளபடியே உள்ளவன்.

மாலியவான்

விண்ணும் மண்ணும் நிறைந்த மூலபல சேனை முற்றும் அழிந்த சேதியை தூதுவர் இராவணனிடம் கூறுகின்றனர். இதற்கு அவன் "என்னினும் வலியரான விராக்கதர் யாண்டும் வீயார்" என்றது டன் பொய்சொல்கிறீர்களா? என்றும் கேட்டுவிடுகிறான்.

சமீபத்திலிருந்த மாலியவான் கூறுவது:

நீயே அனுப்பிய தூதுவர் பொய்சொல்வார்களா? அறியாத் தன்மையுடன் கூறுகிறாய். முதல் மூலப்பொருள் (தற்பத அணு) தன் வெளி என்ற திரையில் இந்த சகத்வடிவை தோற்றுவிக்கிறான். வெளி என்ற திரைச்சீலையை ஒடுக்குங்கணமே ஊழித்தீயினால் மறைந்துவிடும் என்பதை உணரக்கடவாய். இருபத்துமூன்று கடிகையில் சேனையை அழித்தான் என்பது ஓர் மகிமையான செயல் அல்ல. தற்பதவடிவே இராமன் என்பது கருதுவாயாக.

(53) கேட்டயலிருந்தமாலி யீதொரு கிழமைத்தாமோ
ஓட்டிய தூதர் பொய்யே வுரைப்போரோ உலகமூன்றும்
வீட்டுவ திமைப்பினன்றே வீங்கெரிவிரிந்த வெல்லாம்
மாட்டுவா னொருவனன்றே இறுதியின் மனத்தாலென்றான்

கவந்தன்

வாலியின்மேலுள்ள குற்றங்கள்:—

1. மதத்தால் - செருக்குள்ள அறிவினால் சிந்தனைகெட்டு பல கலைகள் கற்றிருந்தும் மெய்ப்பொருள் நெறியிலே யில் முயற்சியின்றிக் காமவசத்தே உழன்றிருந்தது உழல்வது தவறு

"கவனமற அறிவினால் மதத்தோராய்ப் பலகலைநூல் கல்விமிக்குத்
தவமறு காமம் வெகுளிநிறைந்தோரே வேசரிபோல் தள்ளத்
தக்கோர்"

(ஞா. வா. சங்கரன் உபதேசம்)

2. "தனி ஒருவனுக்கு உணவில்லையெனிலிந்த சகத்தினை யழித்திடுவோம்" (பாரதியார்) இவரால் அழிக்கமுடியுமா? பைத்தியகாரன் என்று எண்ணப்படுகிறதா? இதோ. தனிகன் (ஓர் சிவன் மூத்தனுக்கு) உணவில்லையென்ற நிலை மாயையின் வீக்கத்தால் ஏற்படக்கூடுமென்றால் சிந்திப்பதுதான் தாமதம் அழிவுதுரிதம். தனிகனென சுக்ரீவனை மிக துன்புறுத்தியது குற்றம்.

3. சுக்கிரீவன் மனைவியை அபகரித்துக்கொண்டது (விபசாரம்)

4. இராமன் ஆட்சிக்குட்பட்ட சிற்றரசனாக இருந்தும் அகந்தையால் எதிர்கொண்டழைக்காமல் இருந்தது. (எவரையும் வணங்காத கர்வம்)

5. எதிர்த்தவன் பலத்திற்பாதி தனக்கென எண்ணிய அறிவீனம்.

6. *மல்யுத்த நீதிப்படி பீசம் (தொண்டை) கழுத்தைப் பிடித்துச் சுக்கிரீவனை மேலே தூக்கியது (கவனிப்பு) மாதுலர்களான வாலி சுக்கிரீவர்களில் இருவரிடமும் சமமாக இருந்துவரவேண்டிய பக்த அநுமன் சுக்கிரீவனிடமே ஆதரவாக இருந்ததும் சிந்தனைக்குரிய நியாயம்.

கவந்தன் இராமாவதார இரகசியத்தையறிந்தவன். இவன் பூர்வத்தில் தனு என்ற நாமத்தையுடையவன். இராமன் பரிசத்தால் சாபவிமோசனம் பெற்றவுடன் திரிகால உணர்ச்சியுடையவனாகி உன் தேவியை நாடுவதற்கு துணைவர் அவசியமாகும் என்பதை நினைவுபடுத்தி தீயவர் துணைசேராமல் நல்ல நட்பனாகிய சுக்ரீவனைத் துணையாக்கிப் பிராட்டியை தேடி அறிவது சிறந்தது என்று ஆலோசனை கூறினன். பலசாலியாயுள்ள வாலியைக்கூறாமல் தீயவர் சேர்கிலாது செவ்வியோர்ச் சேர்த்துச்செய்க என்று கூறினன்.

---

* மனுநீதி வெண்பா:—

மயிர்கண் ணுயிர்பீசம் வாய்பல் செவியோ
டுயர் தொண்டை யுந்தி யிவைகள் செயலாம்
இவையெட்டிடமும் இயல்பாய் வழுவா
தவை மெச்சிகல் செய்யறம்

(54) கதிரவன் சிறுவனுய கனக வாணிறத்திஞனை
எதிரெதிர் தழுவி நட்பினினிதமர் ந் தவனினீண்டவ்
வெதிர்பொரு தோளினுனை நாடுதல் விழுமிதென்ருன்
அதிர்கழல் வீரர் தாமும் அன்னதே அமைவதாஞர்

பம்பை நதிக்கரையில் அநுமனைச் சந்தித்து நட்புக்கொண்ட இராமன், வாலியால் சுக்ரீவனுக்கு நிகழ்ந்துள்ள துன்பச்செய்திகளைக்கேட்டு வாலிமேல் கோபங்கொள்கிருர். வாலி வதத்திற்கான செயல்கள் - முயற்சிகள் துரிதமாக நடக்கின்றன. ஆலோசனை சோதனையின் முடிவு சுக்ரீவன் வாலியைக்கூவி அழைத்து வெவ்விடத்தில் நின்று போர் செய்யவும் நான் வேறிடத்தில் நின்று பாணம் விடுகிறேன் என்று கூறினன்

(55) அவ்விடத் திராமனீ யழைத்து வாலியானதோர்
வெவ்விடத்தினின்று போர்விளைக்குமேல்வை வேறுநின்
றெவ்விடுத் துணிந்தமைந்த தென் கருத்திதென்றனன்
தெவ்வடக்கும் வென்றியானு நன்றிதென்று சிந்தியா

வெவ்விடம்—யுத்த களம்—வெப்பமான இடம்.
வேறிடம்—ஏகாந்தத் தானம் (ஏகம்-ஒன்று) ஒரேயிடம்.
ஏகமாயுள்ளதானம்—ஒரேயிடம். மேல்வை—முன்னே நின்று
வாலி சுக்ரீவர் யுத்தம் செய்யும் அதேயிடத்தில் நின்றுகொண்டுள்ளார். ஏகாந்தத்தானம்—தற்பத நிலையில் (வெட்டவெளியிலுள்ள) தன் இயற்கை நிலையிலிருப்பதே அந்நிலை

பாண அடிபட்டு அகம்பாவ காரண ஆலோசனைகள் முடிந்து ஞானோதயம் ஏற்பட்டபின்

"கண்ணுற்ருன் வாலி நீலக்கார்முகில் கமலம்பூத்து
மண்ணுற்று வரிவிலேந்தி வருவதே போலும்"

அவன் (வாலி) கண்ணுக்கு இராமன் வருவதுபோலவே தோன்றுகிறது. வருகிருன் என்று கண்டதாகவே இல்லை. பக்கத்தில் நின்றுள்ளான் என்பதுபோன்றே அமைந்துள்ளது

"துறை திறம்பாமற் காக்கத்தோன்றினுன் வந்துதோன்ற" தற்பத நிலையில் நின்றும் புறத்தோற்றத்திற்கியையத் தோன்றினுன் என்ப. தர்ம மார்க்கம் நியதியின் மாறுபாடுகள் நிகழ்வதைத் தடுத்து நிறுத்த வந்த அவதாரமூர்த்தியே இராமன்.

புறங்காண அகங்காணப் பொதுமுகத்தினருள் நோக்கம்
இறங்காத தாமரைக்கண் எம்பிரான் இராமன்

மனம்போன போக்கிலுழலும் மனிதன் புறத்தோற்றத்தேயீடுற்று உண்மைக்கு மாறுபட்ட வினையிலலேயும் செயலிலும் நல்வினையின் புண்ணியத்தால் அகத்தோற்ற ஞானம் பெற்றபோது புறத்தோற் றத்தை யிழந்துவிடுவது இயல்பு.

இராமனுடைய செந்தாமரைக்கண்ணின் செயல் அவ்வா றல்ல அகபுற தோற்றங்களில் தற்பதநிலை வழுவாதபடி எப்போ தும் நிகழும். புகழ்வினைகளை நடாத்தும் திருவருட்பொருளே இராமன்.

வாலி சுக்கிரீவர் இருவரும் யுத்தம் செய்கிறார்கள். வாலிக்கு இது கடைசிநாள் யுத்தம் ஆதலால், எச்சரிக்கையுடன் ஒரே நோக் கத்துடன் நடக்கிறான். வேறு தோற்றங்கள் பார்வைக்கு வராத நிலை சுக்கிரீவன் யுத்தம் கருணை இன்னும் வரவில்லையே என்ற எதிர்நோக்கத்துடனேயே செயற்படுகிறான் இராமன் இருப்பது (ஏகாந்தத்தானம்) சமீபம் என்றும் அறிவன். வாலி கண்ணுக்குப் புலப்படாத நிலை என்றும் கண்டுள்ள ஞானி சுக்கிரீவன்.

இராமன் கருணை மாறாமல் அகபுற சமநோக்குடன் நின்று கொண்டுள்ளான். "யாதெவ நினைந்தான் அன்னபயத்தன (பயக்கும்) எண்ணிய எண்ணியாங்கெய்துப" என்ற தற்பத நியதியின் திரை யுத்தகளத்தே நிலவி வெவ்விடமாக மாறிய தோற்றம்.

வாலி கண்ணுக்கு இராமன் தென்படாத நிலை. அண்ணல் மறைந்துநின்றெய்தது — பாவியர் கண்ணுக்குப் புலப்படாதுள்ள படியே தண்டனை தரும் தற்பத நியதியே அவனது தர்மநெறி. வெட்டவெளியில் எங்கும் பிரகாசமாயுள்ள பரம்பொருளின் தோற் றப்படாதநிலை — பாவியர் கண்ணின், குற்றமேதவிர ஒரே நிலையி லுள்ளபடி உள்ளதுதான் பிரம சொரூபம்.

"எடுத்துப்பாரிடை யெற்றுவாம் பற்றியென் றிளவல்
கடித்தடத்தினும் கழுத்தினுந்தன்னிரு கரங்கள்
மடுத்து மீக்கொண்ட வாலிமேல் கோலொன்று வாங்கித்
தொடுத்து நாணொடு தோளிருத்தி ராகவன்றுரந்தான்"

பாணம்பட்டபின் நின் மண்ணினுக்கென்னுடல் பாரமன்று"
என்று கேட்கிறான் வாலி

கார்த்தவீரியார்ச்சுனனையும் அரசர்பரம்பரையையும் ஒருங்கே அழித்துவந்த பரசுராமன் கர்வபங்கத்தின்பின் உலக ஆட்சி இராம

னுக்கே உரியதாக ஆகிவிடுகிறது. தசரதன் முதலான சகலரும் சக்கரவர்த்தியான இராமனுக்கு சிற்றரசர்களே. தந்தை என்ற முறையில் சக்கரவர்த்தியாக இருக்கலாம். இராவணன் காலத்தே பரசுராமர் இருந்தும் கவனிக்காமலிருந்தது. தான் வந்த அவதார நோக்கம் அதுவல்லபோலும்.

வாலிக்கு அரன் தந்த வரங்கள்:

1. கந்தவேள் வேல்புகாதவன் மார்பில்

2. எந்த தேவாத்திரங்களும் வாலி மார்பில் புகாத வரபலமே கவசம்.

3. எதிர்த்தவன் பலத்திற்பாதி தனக்கு (இயற்கையிலேயே தேவாசுரர் பலம் யாவும் ஒருங்கே அமைந்தவன் வாலி)

4. இந்திரனும் வாலியும் விஷ்ணு அம்சமானவர்கள்.
நெறி—சிவபூசை செய்யும் இயல்பினர்.

வாலி வரபலத்தை நம்பியிருந்த அகந்தைக்கு மாறுபாடாக் இராமபாணம் மார்பில் எளிதாக ஊடுருவிச்செல்கிறது. அழுகிய வாழைப்பழத்தில் ஊசிபுகுவதுபோல், அகங்காரகாமியின் சரீரம் அழுகியவாழைப் பழம், வில் உந்தும் வேகத்தையுடைய பாணம் வரபல கவசத்தைத் துளைக்கமுடியாது. தற்பதயோக இராமன் சிந்தனைவேகத்துடன் பாணம் செல்வதால் வரம்தரும் பலம் தற்பத யோகசக்தியால் தருவனவாதலால் அதுவே! பாணத்துடன் வரும் போது மாறுபாடாக நிற்கவியலாதல்லவா?

"வில்லினூற்றுரப்பரிதிவ் வெஞ்சாமெனவியக்கும்
சொல்லினால் நெடுமுனிவரே தூண்டினுரென்னும்"

ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில் (குறள்பா 472)

(இ-ள்) ஒல்வது—பொருந்துவதான
அறிவதறிந்து—அறியவேண்டியது தற்பதம் (தன்னையறியும் அகமுக நோக்கப் பேரறிவுபெறல்) நுண்மா நுழைபுலம் பெறல்.
அதன் கட்டங்கி—அப்பேரறிவுள் (தற்பத நிலை) அமைந்து
செல்வார்க்கு—(இறைவன் பொருள் சேர் புகழ்வினை யாற்றுஞ்செயலில்) செல்வார்க்கு
செல்லாததில் – நடைபெறாத செயல் யாதும் இல்லை.

(க-ரை) பொருந்துவதான அறியவேண்டிய தற்பத நிலையிலமைந்து செயற்படுவோர்க்கு நடைபெறாத செயல் யாதுமில்லை.


விளக்கம்:— வாலி மார்பு என்ன!

அண்டத்தைப் பொதுத்தப்புறத்தோடென அமையும்!!

புறங்காண அகங்காணப் பொதுமுகத்தினருள் நோக்கம்
இறங்காத தாமரைக்கண் எம்பிரான் இராமன்"

என்பதை மீட்டும் ஞாபகப்படுத்துகிறேன்.

தற்பத விளக்கம்



அரக்கர்களையும்:

"செஞ்சரத் தூய்மையால் தேவராக்கினான்"

அகங்கார காம அதிபல வாலி சரீரம் தற்பத நெறிக்கு அழுகிய

வாழைப்பழம்போலச் சுலபமாக இராமபாணம் துளைத்தேகுகிறது. பாணபுனிதத்தால் அஞ்ஞானம் விலக ஞானநோக்கத்தால் சிந்தித்து இராமனை யாரென உணர்ந்துகொள்கிறான்.

(56) புரமெலா மெரி செய்தோன் முதலினோர் பொருவிலா
வரமெலாமுருவியென் வசையிலா வலிமைசால்
உரமெலா முருவியென்னுயிரெலா நுகருநின்
சரமலாற் பிறிதுவே றுளதரோ தருமமே."

(பொ) திரிபுராந்தகன் முதலியவர்களால் கொடுக்கப்பெற்ற நிகரற்ற வரபலங்களையூடுருவி என் வலிய மார்புட்புகுந்து உயிரை உட்கொள்ளும் உன் பாணமே தர்மதேவதை என்கிறான்.
(இராமபாணம் நல்லோரைக் கண்டால் விலகியோடும், என்பதே)

(57) மாவலச்சூலியார் வாழ்த்துனர்க்குயர்வரம்
ஓவலற்றுதவல் நின் ஒருதனிப் பெயர் இயம்பும்
ஆவலிப் புடமையாலாகும் அப்பெயரியாம்
தேவநிற்கண்ட வெற்கரிதரோ தேரினே

வாலியின் ஞானவிசாரணையால் தேர்ந்துசொல்லாய் வருவன. சூலபாணி அவனடியார்களுக்கு மேலான வரங்களை ஓய்வின்றிக்கொடுத்து வருகிறான், இந்த வரம்தரும் பலம் சிவபெருமானுக்கு எப்படிவந்தது? என்று சிந்திக்கிறான்

சிவபெருமான்—சதா தாரக மந்திர தியானம் செய்துவருவதே, வரம்தரும் பலம் என்றே தெரிந்துகொள்கிறான், அந்த தாரக நாமமே நின் நாமம்; நீயே தாரக பிரமம், ஆதலால் அந்த வரபலம் உன்முன் இல்லாததாகும், என்பதே முற்றுப்பெற்ற முடிவாம் என்று கூறினான்.


பிரமா சதா செபம் செய்துகொண்டிருக்கிறார். விஷ்ணு சதா யோக நித்திரை செய்கிறார். சிவன் சதா நிசயோகத்திலிருக்கிறார். இவர்கள் சிந்திக்கும் மந்திரம் யாது?

சிவபெருமானே கூறுகிறார்:

(58) கல்லாலின் புடையமர்ந்து நான்மறையாறங் கமுதற்கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய்
எல்லாமாய் அல்லவுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்துகாட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத்தொடக்கை வெல்வாம்.

சனகாதி முனிவர்கள் நால்வரும் சிவபெருகானிடம் சென்று வணங்கித தற்பத சிவயோகம் துரிதமாக அடையும் மகாமந்திரம் எது? என்று கேட்கிறார்கள் பரமன் சிந்திக்கிறார். அந்த மகா மந்திரத்தை ஆரம்பித்து, கடைசி அட்சரம் சொல்லும் இடைக் காலத்திலேயே நிசயோகம் வந்துவிடுமே! எவ்வாறு கூறுவது என்று ஆலோசித்தவராய் சின்முத்திரையின் மூலம் காட்டி அருளினார்.

*சின்முத்திரை விளக்கம்.



* சிலர் சின்முத்திரைக்குப் பொருள் கற்பனை செய்துள்ளார்கள் முத்திரை என்பது எழுத்தின் அச்சு என்பது பொருள். மை தடவி காகிதத்தில் வைக்க அவ்வெழுத்துப் பதிவது என்பதை உணர்வீர்கள். பொய்யான மதச்சார்பிலிருந்து விலகி உண்மையைப் பற்றுங்கள்.

விளக்கம்:—

சுட்டுவிரல் மோதிரவிரல் நடுவிரல் இம்மூன்றின் இடைப் பகுதியைப்பார்த்தால் (ர) இவ்வாறுள்ள ரா—என்பது. நடுவிரல் ஆட்காட்டி விரல் பெருவிரல் மூன்றும்உள்ளநிலைகொண்டு பாருங்கள் ம—என்பதாகும். ராம, என்ற தாரக மந்திரமே நிசயோகமந்திரம்.

இத்தகைய ஞானவிசாரணையில் உண்மை ஞானம் தோன்றவே பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருள். இவை போன்று மெய்மையல்லாதவற்றை மெய்மை யென்றெண்ணும் தீவினையாளருக்குத் தென்படாத அறிவின் சொரூபமே! பொய்யுடையுள்ளத்தார்க்குப் புலப்படாப்புலவ!என்று இராமனை வணங்கிய வாறு. அந்நிலை துறந்து வானுக்கப்புறத்துலகனுறைன்

(59) ஈசன்மொழிய நூற்பொருளாலன்றிப் பெறவு மரிதாகும்
தேசார் குரு நூல் மாணாக்கன் சிறக்க விம்மூவருங்கூடிற்
பாசாதீதப் பரமெய்தும் பன்னாள் நீங்கா விக்கூட்டம்
ஏசாவுணர்வுந் தரும்பகற்போ தெல்லாத்தொழிலுந்
தருவதுபோல்
(ஞா-வா)

(எ-து) குரு உபதேசம் ஞானநூற்பொருளறிதலல்லாமல் பெறுதற்கரியது. பிரகாசம்நிறைந்த ஆசாரியரும் ஞானநூலும் விசேட மாணவனும் ஒன்றுசேரில் பாசத்திற்கதீதமான பிரமமடையும் பல கால நீங்காத இச்சங்கமானது (பகற்காலம் சகல கிரியைகளையும் கொடுப்பதுபோல) குற்றமற்ற ஞானத்தைக்கொடுக்கும். —எ-ம்

நூற்பயன்

உண்மைப் பொருளை உணர்வீர் நினைத்தபடி
நண்ணும் சகசால நன்கறிவீர்—வண்மையார்
முப்பொருளா மூல முதற்பொருளாற் சக்தியெலாம்
எப்பொழுது முள்ள தியல்பு.

முற்றுப்பெற்றது.

அறிவிப்பு.

சூக்கும பஞ்சபட்சி நூல் ரூ. 1—00

நம் சரீரம் பஞ்சபூத ஏற்றத்தாழ்வின் கூட்டுறவிலாயதால் பஞ்சபூதங்களையே பட்சி என்ற இனைப்பெயர் கொடுத்து விவரிக்கப்பெற்ற வெற்றிதரும் நூல். இதை ஒவ்வொருவரும் தன் பட்சியை அறிந்து அரசுநேரத்தில் காரியங்கள் ஆரம்பம் செய்து வெற்றியும் லாபமும் பெற்று இன்பம் அநுபவிக்கும் நூல்.

திருக்கணித இராமசேகரம் ரூ. 3—00

ஜாதக கணிதம் கிரகஸ்புடம் துல்லியமாகத் துரிதமாகச் செய்ய உதவும்.கணித ஜோதிடர்களுக்குஅவசியமானது.பஞ்சாங்கம் அவசியமில்லை.

ககோளநூல் ரூ. 10—00 (அச்சில்)

உலகத்தில் பற்பல பஞ்சாங்கங்கள் ஒன்றுக்கொன்று மாறுபாடாக ஏற்பட்டுக் குழப்பமாக வுள்ளதால் சரியான கிரகஸ்புடம் சாதகம் கணித்து மெய்யான பலன் காணவேண்டிய கணித ஜோதிட பஞ்சாங்க ஆசிரியர்களுக்கு அத்யாவசியமான நூல். எந்தக் கல்பகாலத்துக்கும் முன்பின் எந்த யுகத்திற்கும் திருஷ்டிப் பரீக்ஷைக்குச்சரியான ஸ்புடம் செய்தற்குரியது.

திருக்குறள் உண்மையுரை (கடவுள் வாழ்த்து) பக்கம் 50 ரூ. 1—00

வாலியை (இராமன்) மறைந்திருந்து எய்யவில்லை ரூ. 1—00

திருக்குறள் விரிவுரை – ஒலி இலக்கணம், சரீர தத்துவம், சித்த ரகசியம் நூல் தயாராகிறது.

1. கவனிப்பு:— கர்ம வியாதி என்பது விஷபாசங்கள் உள்ளடங்கி உள்ளமுக்கப்பட்டுக் கபாலத்தின் இடையே நிறைந்துவழிந்து சரீரத்தில் பரவுவது. குணமாகிக் குணமாகி வரும் இயல்புகொண்டது. இவை ஏற்படாதிருக்கவும், பூர்வ விஷபாசங்களைப்போக்கவும், சரீர இயற்கை முனைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கும். எனவே விஷபாசங்களை உள்ளமுக்கி உடன் குணம்தரும் மருந்து உபயோகமே கூடாது. உதாரணமாக சளி: விஷபாசம் வெளியாகும் முதலிடம். இதன் சிகித்சையில் கைதேர்ந்த *சித்தன்* சித்தவைத்தியன் ஆலோசனை சிகித்சையன்றி வேறு சிகித்சையில் குணந்தருவதுபோல் தெரியினும் பின் விளைவுகள் விபரீதம் தரும் என்பதில் ஆட்சேபமில்லை. எச்சரிக்கை.

2. வியாதிகள்: சாத்தியம். மருந்தில் சாதாரணமாகவே குணமாம்.
   கஷ்டசாத்தியம்: சிறந்த முயற்சி; பத்தியத்தில் குணமாகும்
   அசாத்தியம்: கர்மவியாதி கடினமானது; விட்டு விட்டுவரும். விடாமுயற்சியில், சிறந்த பத்தியத்தில் குணமாகலாம். அல்லது அதிகப்படாது தடுக்கலாம்.

3. சிக்கலான எல்லா வியாதிக்கும் மருந்துகள் உள்ளது.

கைகண்ட மருந்துகள்

1.	வழுக்கைத் தலையிலும் மயிர்வளர் தைலம்	புட்டி ரூ.	16–00
2.	புழுவெட்டில் மயிர்வரு தைலம் (R. S.)	,,	10–00
3.	பாலிய வாலிபர் நரை நிவாரண மயிர் கறு தைலம்	,,	18–00
	ஷை சிறியது	,,	9–00
4.	மயிர் வியாதிகள் வரட்சி வெடிப்புக்கு திலகந்தி ரசாயனம்	,,	33–00
	ஷை சிறியது	,,	16–00
5.	நரையைத்தடுக்கும் கல்பரசாயனம்	,,	55–00
	ஷை சிறியது	,,	28–00
6.	வற்றிய மார்பு பூரிக்க (பெண்களுக்கு) தன்யாமிர்தம்	,,	16–00
7.	அபாரதாதுபல இரசித லேகியம்	,,	10–00
8.	கிழவரும் வாலிபத்தன்மைபெறும் அயத்தங்கம்	,,	50–00
9.	கிழவரும் வாலிபத்தன்மைபெறும் தங்கச்செந்தூரம்	,,	100–00
10.	வலிப்புநிவாரண புவனமிர்தம்	,,	100-00
11.	வியாதிநிவாரண குழந்தை மருந்து செட்		6–00
12.	சொறி படை நிவாரண இரசகந்த மெழுகு 60 வேளை	,,	66–00
13.	குடற்புண் வாய்ப்புண் நிவாரண செட்	,,	35–00
14.	பல் வியாதிகள் நிவாரண கற் பற்பொடி	,,	5–00
	ஷை சிறியது	,,	3-00
15.	ஆஸ்த்மா ஏங்கல் நிவாரண சுவாசகுடோரி	,,	45–00
16.	ஆப்ரேஷன் அவசியமில்லை டான்சில்சினிசெட்	,,	27–00
17.	வெண்குட்ட நிவாரண ஜோதிமணி கல்பம் செட்	,,	52 00
18.	வாய்வெள்ளை நிவாரண செட்	,,	135–00
19.	மூலபவுந்திர நிவாரண கருணை ரசாயனம்	,,	12 00
20.	ஆரோக்ய ஸ்னான ஜீவசஞ்சீவி தைலம்	,,	10-00
21.	தலைவலிக்கு ஸ்னான அரக்கு சந்தனாதி தைலம்	,,	10–00
22.	காது சீழ் நிவாரண செட்	,,	35–00
23.	சுகபேதிக்கு சக்தி மாத்திரை	,,	1–25
24.	மலபந்த நிவாரண பழலேகியம்	,,	10–00
	சிறிய டின்	,,	5–00
25.	வாய்வுரோக நிவாரண வாயு குளிகை 30	,,	3–00
26.	காமாலை பாண்டுவுக்கு அய கல்பம்	,,	35–00
27.	தாமிர கல்பம் சகல வியாதிக்கும்	,,	303–00

தமிழ்ச் சித்தர் நிலையம்,

வெங்கடேசா காலனி,

பொள்ளாச்சி P. O. (S. I.)